## பகுதி – 9

# பெண் விடுதலை

### ஆண், பெண் உறவு

"உலக மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய
வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும்
அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். இது
ஒழிந்த நிலையே சமத்துவம், சுதந்தரம் என்னும்
முளை முளைக்கும் இடம்"

– ஈ.வெ.இரா.

### வரலாற்றுக்கு முந்திய காலம்

உயிரியல், நிலத்தியல், மானிடவியல், வானவியல் அறிஞர்களின் முடிவுப்படி இவ்வுலகில் உயிரினங்கள் தோன்றி 12 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் சாத்தனூர் குடிகாடு என்ற ஊரில் உள்ள உயிரப் படிவக் கல்மரம் (FOSSIL TREE) 12 கோடி ஆண்டுகளுக்கு முந்தியது என்று நிறுவப்பட்டிருப்பதே இதற்குச் சான்றாகும்.

மானிடவியல், விலங்கியல் அறிஞர்கள் ஆய்வுப்படி மனிதன் தோன்றி இரண்டு இலக்கம் ஆண்டுகள் ஆகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மானிடம் நாகரிகம் பெற்ற காலம் பத்தாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டதாகும்.

பழம்பெரும் நாடுகளான கிரேக்கம், உரோம், பாரசீகம், இந்தியா, சீனா முதலான நாடுகளைப் பற்றிய தோராயமான வரலாறுகள் ஆறாயிரம் ஆண்டுகட்கு உட்பட்டவையே. இந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் கி.மு. 3000 தொடங்கி 1500 வரை நிலவியதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்து பிறந்த காலத்தில் உலகில் இருந்த மக்கள் தொகை இருபது கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. மிகப் பரந்த இவ்வுலகில



காலத்தில் வாழ்ந்த இருபது கோடி மக்களுக்கு இயற்கையில் விளைந்த காய், கனி, கிழங்கு, தானியம் முதலியவை உணவுப் பண்டங்களாகப் போதிய அளவுக்குமேல் கிடைத்திருக்க வாய்ப்புண்டு.

கிறிஸ்து காலத்துக்கு முற்பட்ட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் மனிதக்கூட்டம் ஒரே இடத்தில் நிலைபெற்று வாழ்ந்ததாக அறிய முடியவில்லை. வேண்டிய உணவைத்தேடி இடம்பெயர்ந்து அலைந்ததென்பதே வரலாற்றுக்கு முந்தைய கட்டத்தில் வாழ்ந்த மனிதக் கூட்டத்தின் வாழ்க்கை நிலைமையாகும். அப்படி இடம் பெயர்ந்த மக்கள் இயற்கையில் விளைந்த பண்டங்களைத் தின்றதோடு விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடித் தின்கின்ற வேலையையும் மேற்கொண்டிருந்தனர். மனிதன் செய்த முதலாவது தொழில் வேட்டையாடுதலே. அதற்கென அவன் கண்டுபிடித்த முதலாவது ஆயுதங்கள் கல்லும், தடியும், எலும்புகளுமேயாகும். இரண்டாவது கட்டத்தில் இலைகளே கூர்மைப்படுத்தப்பட்டு ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

நம்மால் வேட்டையாடப்பட்ட விலங்குகள், பறவைகளின் ஊனை வேட்டையில் பங்கேற்ற அத்துணைப் பேரும் அவரவர்க்குத் தேவையான அளவு பச்சைக் கறியாகவே தின்றனர். அடர்ந்த காடுகளில் மரங்கள் உராய்வதனால் உண்டான காட்டுத்தீயில் வெந்து கிடந்த விலங்குகள், பறவைகளின் ஊனைத் தின்ற மனிதன் - சுட்டுத்தின்றால் ஊன் சுவையாக இருக்கும் என்பதைக் கண்டான். உராய்வினால் நெருப்பு உண்டாவதைத் தெரிந்துகொண்ட மனிதன் கற்களையும், மரக்கட்டைகளையும் உரசித் தானே தீயை உண்டாக்கிக் கொண்டான். மனிதன் கண்டுபிடித்த-வாழ்க்கைக்கான முதலாவது சாதனம் தீயே ஆகும்.

வேட்டையாடும் வாழ்க்கை நிலையில் இருந்தபோதே எளிதில் பிடிக்கப்படவும், பாதுகாக்கப்படவும், பழக்கப்படுத்தப்படவும், பயன்படுத்தப்படவும் ஏற்றவையான மாடுகளையும், ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு மேய்ச்சலுக்கான புல்வெளிகளைத் தேடிக் குழுவாக மக்கள் இடம்பெயர்ந்து கொண்டே இருந்தனர். அப்படிச் சென்ற இடங்களில் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் ஒரு சேரவே தங்கி இருந்தனர். பெரிதும் அம்மணமாகவும், இலைகளாலும், மரப்பட்டைகளாலும் உடம்பை மறைத்துக் கொண்டுமே அவர்கள் வாழ்ந்தனர். அவர்களிடையே ஆண், பெண் சேர்க்கை என்பது ஓர் இயல்பான செயலாகவே நிகழ்ந்து வந்தது

## 9.1.2. 'கற்பு'ப்பற்றிப் பெரியார்

"கற்பு என்கிற வார்த்தையைப் பகுபதமாக்கிப் பார்ப்போமானால் - கல் என்பதிலிருந்து வந்ததாகவும், அதாவது, படி-படிப்பு என்பது போல, கல்-கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது அறியும். 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்கிற வாக்கியப்படி பார்த்தால் 'கற்பு' என்பது சொல் தவறாமை - அதாவது, நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது என்கிறதான கருத்துகள் கொண்டதாக இருக்கின்றது.

கற்பைப் பகாப்பதமாக வைத்துப் பார்த்தால், 'மகளிர் நிறை' என்று காணப்படுகின்றது. இந்த இடத்தில் மகளிர் என்பது பெண்களையே குறிக்கும் பதமாக எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. நிறை என்கின்ற சொல்லுக்குப் பொருளைப் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கிற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும் - அழிவில்லாதது, உறுதியுடையது என்கிற பொருள்களே காணக் கிடைக்கின்றன.

ஆனால், ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் 'கற்பு' என்கின்ற பதத்திற்குப் 'பதிவிரதை' என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில்தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயம். அதாவது - பதியைக் கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், பதி என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்களிருப்பதால் அடிமைத்தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. ஆனால், தலைவி என்கின்ற வார்த்தை, அதன் உண்மைக் கருத்துடன் வழங்கப்படுவதில்லை. நாயகன், நாயகி என்கின்ற சமத்துவமுள்ள பதங்களும் கதைகளிலும், புராணங்களிலும் ஆண்-பெண் இச்சைகளை உணர்த்தும் நிலைகளுக்கே மிகுதியும் வழங்கப்படுகின்றன. ஆகவே, காமத்தையும், அன்பையும் குறிக்குங் காலங்களில் சமத்துவப் பொருள் கொண்ட நாயகன்-நாயகி, தலைவர்-தலைவி என்கின்ற பதங்களை உபயோகித்து விட்டு, கற்பு என்கின்ற நிலைக்கு வரும்போது அதைப் பெண்களுக்கு



மாத்திரம் சம்பந்தப்படுத்தி, 'பதி' ஆகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் நமது திருவள்ளுவரின் நிலைமையும் ஏமாற்றமாக்கத்தையே தருகின்றது. அதாவது, அவர் வாழ்க்கைத் துணைநலத்தைப் பற்றிச் சொல்லவந்த 6-ஆம் அத்தியாயத்திலும் (6-ஆம் அதிகாரம்), பெண்வழிச்சேறல் என்பதைப் பற்றிச் சொல்லவந்த 91-ஆம் அத்தியாயத்திலும் (91-ஆம் அதிகாரம்), மற்றும் சில தனியிடங்களிலும் பெண்கள் விஷயத்தில் மிக்க அடிமைத் தன்மையையும், தாழ்ந்த தன்மையையும் புகுத்தப்பட்டிருப்பதாகவே காணக் கிடக்கின்றது. தெய்வத்தைத் தொழாமல் தன் கொழுநனாகிய தன் தலைவனைத் தொழுகின்றவள், மழையைப் பெய்யென்றால் பெய்யும் என்றும், தன்னைக் கொண்டவன் என்றும் - இம்மாதிரியான பல அடிமைக்கு உகந்த கருத்துகள் கொண்ட வாசகங்கள் காணப்படுகின்றன. இவ்விஷயத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவோர் மேற்கண்ட இரண்டு அத்தியாயங்களையும் - 20 குறட்பாக்களையும் உரைகளைக் கவனியாமல் மூலத்தை மாத்திரம் கவனிக்கும்படி வேண்டுகிறேன்.

கற்பு என்பதற்குப் 'பதிவிரதம்' என்று எழுதிவிட்டதன் பலனாலும், பெண்களைவிட ஆண்கள் செல்வம், வருவாய், உடல்வலி கொண்டவர்களாக ஆக்கப்பட்டுவிட்டதனாலும், பெண்கள் அடிமையாவதற்கும், புருஷர்கள் மூர்க்கர்களாகிக் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை.

தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷையில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம் ஆண்களின் ஆதிக்கம் தவிர வேறில்லை.

மற்றும், சில சமூகங்களில் 'பர்தா' என்றும், 'கோஷா' என்றும், 'திரை' என்றும் - அதாவது பெண்கள் அறைக்குள்ளிருக்க வேண்டியவர்களென்றும், முகத்தை மூடிக்கொண்டு வெளியில் போக வேண்டியவர்கள் என்றும் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளும்; புருஷன் பல பெண்களை மணக்கலாம், பெண்கள் ஏககாலத்தில் ஒரு புருஷனுக்கு மேல் கட்டிக்கொண்டு வாழக்கூடாது என்ற கொள்கையும்; நம் நாட்டில் ஒரு தடவை புருஷன் - பெண்சாதி என்கின்ற சொந்தம் ஏற்பட்டுவிட்டால் பிறகு அந்தப் பெண்ணுக்குச் சாகும் வரைக்கும் வேறு எவ்விதச் சுதந்தரமும் இல்லையென்றும், புருஷன் பல பெண்களைக் கட்டிக்கொண்டு ஒரு பெண்ணின் முன்பாகவே பல பெண்களுடனும் கூடி வாழலாம் என்றும், புருஷன் தனதுடைய மனைவியைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு, அவளுடன் ஒன்றித்து

## 9.2.3. மற்ற மதங்களில் விதவை மறுமணம்

விதவைத் திருமணம் என்பது நம் நாட்டில் உள்ள இஸ்லாமிய கிறித்தவ சமயங்களில் தங்கு தடையின்றி நடைபெறுகின்றது. இதேபோல இந்து மதத்தைச் சார்ந்த கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வது மத, சாஸ்திர அடிப்படையில் தடுக்கப்படுவது ஏன் என ஈ.வெ.இரா வினவினார். கைம்பெண் மறுமணம் பெருகுவதற்குத் தமக்கே உரிய தன்மையில் சில கருத்துகளை முன்மொழிந்தார்.

'விதவைத் திருமணம்' என்கிற சொல், நமது பெண்கள் விஷயத்தில்தான் சொல்லப்படுகிறதே தவிர, ஆண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மை ஒரு புருஷனுடன் கூடி அவர் காலமான பிறகு இன்னொரு புருஷனை மணந்து கொள்கிறார்களோ, அதுபோல ஆண்களும் பலர், ஒரு மனைவி தவிர இரண்டாவதாக வரிப்பதை விதவைத் திருமணம் என்கிறார்களா? 'விதவன் திருமணம்' என்றுதானே போட வேண்டும்?

நானே ஒரு விதவன்; விதவனாகிப் பின் இரண்டாவது பெண்டாட்டி கட்டிக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரி சமயம் நம் நாட்டில் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே நடந்து வருகிறது; பெண்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். சாஸ்திர, மத புராணங்களைப் பார்த்தால் ஏராளமாக உண்டு. நமது பெண்கள் இப்படிச் செய்து கொள்ளுகிறதுதான் நமக்கு அதிசயமாகத் தோன்றலாமே தவிர, உலகத்தில் இது அதிசயமல்ல.

கிறித்தவர்களிலும், முஸ்லிம்களிலும் - கணவன் இறந்தவுடனேயே பெண்கள், வேறு புருஷனைக் கட்டிக்கொள்வார்கள். இது நம் நாட்டில் சிறு கூட்டத்தில் நடப்பது அதிசயம் என்னலாமே தவிர, புருஷன் செத்துவிட்டால் வேறு ஒரு புருஷனைச் சேர்த்துக்கொள்வது உலகத்தில் நடந்துவருகிற வழக்கமேயாகும். இந்துக்கள் என்று சொல்லப்படுகிற சாதியில் பல சாதிப் பிரிவுகள் உண்டு. சமூகத்தில் சிலரை, அவர்கள் ஏதோ தாழ்வான சாதி என்று கூறுகிறார்கள்! ஆனால், அவர்களிடையே இவ்வித மறுமணம் ஏராளமாக நடந்து வருகிறது.

சிலர் கூறுவார்கள், 'சாதி ஒழிய வேண்டுமானால் ஒவ்வொருவரும் தம் சாதியில் திருமணம் செய்யக்கூடாது என்று அரசாங்கம் சட்டம் செய்ய வேண்டும்,' என்று. அது தப்பு. நம்மில் சாதியில்லை. பார்ப்பான் ஒரு சாதி; மற்ற நாம் எல்லோரும் ஒரு சாதி. இந்த இரண்டுக்கும் நடப்பதுதான் கலப்புமணம் எனலாம். எப்படி உத்தரவு போட்டால் பயனுள்ளதாகும் என்றால், ஒருவன் கலியாணமே ஆகாமல் இருந்தால் கலியாணம் ஆகாத பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளலாம்,



அது தப்பு இல்லை. ஆனால், ஒரு கலியாணம் ஆகி மனைவி தவறிப்போய் இரண்டாவது கலியாணம் செய்துகொண்டால் அது போலவே ஒரு கலியாணம் ஆகிக் கணவன் தவறிப் போயுள்ள பெண்ணையே கலியாணம் செய்து கொள்ளவேண்டும். இது மாதிரியே ஒரு பெண்ணும் முதல் கலியாணமானால் முதலாவது கலியாணம் செய்து கொள்ளுபவனையும், இரண்டாவது கலியாணமானால் முதல் மனைவியை இழந்தவனையும் கலியாணம் செய்து கொள்ளவேண்டும்.' இது மாதிரி உத்தரவு போடணும். இப்போது இது மாதிரி இல்லாததால், இது மாதிரி முறை புதுமையானதாகத் தோன்றுகிறது. இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இதில் இந்தப் பெண்ணைத்தான் பாராட்டவேண்டும். ஒருமுறை கெட்டது தப்பு இல்லை. நம் கடவுள், மத, சாஸ்திர புராணங்களைப் பார்த்தால் தெரியும் - கடவுள் என்பவைகளின் பெண்டாட்டிகள் கெட்டதையும், அவர்கள் ஒழுக்கங்கெட்ட நடத்தைகளும்' மானமிழந்த கடவுளும் உண்டு. மனைவியை வாடகைக்கு விட்ட பக்தர்களும் உண்டு. மோட்சம் பெறுவதற்காகத் தம் மனைவியைக் கடவுளுக்குத் தானம் தந்தவர்கள் கூட உண்டு" (திருத்தாலத்தில், 31.3.1959 இல் சொற்பொழிவு, 'விடுதலை' 7.4.1959; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 144-46)

### 9.2 பயிற்சி வினாக்கள்

1 விதவைத் திருமணம் பற்றி ஈ.வெ.இரா கூறியவைகளைத் தொகுத்துத் தருக. இந்த நடைமுறைக்கு அவர் ஒரு முன்னோடி என்பதனைச் சான்று காட்டி நிறுவுக.

2 'ஆணாதிக்கமும் கைம்பெண் தன்மையும்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

3 வெவ்வேறு மதங்கள் விதவைக்கு அளித்துள்ள, மறுத்துள்ள மறுமண உரிமை பற்றி ஒப்பாய்ந்து ஒரு கட்டுரை எழுதுக.

**பெரியார் :** நான் சொல்றேன். அந்த எண்ணம் மக்கள் மனசிலேருந்து மாற வேணுமானா 50 சதவீதம் பெண்களுக்கு உத்தியோகம்; 50 சதவீதம் ஆம்பிள்ளைக்கு உத்தியோகம். ஒரு ஆபிஸ்லே 100 பேர் உத்தியோகஸ்தர் இருந்தா – 50 பெண் இருக்காங்களான்னு கேக்கணும்; இல்லாவிட்டா அதைப் போடுன்னு சொல்லணும். அப்ப பெத்தவங்களுக்கு – ஆண் இருந்தாலும் ஒண்ணு, பெண் இருந்தாலும் ஒண்ணுன்னு ஆகும். இப்ப ஆம்பிள்ளையெல்லாம் உத்தியோகம் பாக்கறாங்க; பொம்பளைங்க எல்லாம் வீட்டிலே இருக்காங்க. அதனாலேயே நமக்கு ஆம்பிளைப் புள்ளை ஒண்ணு வேணும்னு தோணுது; அவன் சம்பாதிக்கிறான்னு தோணுது. அதனாலே நாம் ஈக்வலைஸ் (equalise) பண்ணிட்டா உத்தியோகத்தை ஆருக்குப் பாதின்னு?

**அமைச்சர் :** அப்போ, ஆம்பிளைங்க கொஞ்சம் 'அப்போஸ்' பண்ணுவாங்களே, எதிர்ப்பாங்களே?

**பெரியார் :** ஏன்? எப்படி 'அப்போஸ்' பண்ணுவாங்க? எப்படி நீங்கதான் அப்போஸ் பண்ணமுடியும்? உங்க மகளுக்கும், உங்க தங்கச்சிக்கும், உத்தியோகம் வரும்போது, நீங்க ஏன் அப்போஸ் பண்றீங்க?

**அமைச்சர் :** ரொம்ப சரி.

**பெரியார் :** இல்லாது போனாதானே வரும்; யாருக்கோ வருதுன்னா! உங்களுக்கு வேலையில்லை. உங்க பொண்ணுக்கும் வருது – உத்தியோகம்; உங்க தங்கச்சிக்கும் வருது.

**அமைச்சர் :** ரொம்ப சரி.

**பெரியார் :** அதனாலே அப்படின்னு சட்டமே போட்டுடுங்க–இப்போ ஆதித் திராவிடருக்குப் போட்டமாதிரி. 50 சதவீதம் 'பீமேலுக்கு' (பெண்ணுக்கு) உத்தியோகம் ஒதுக்கிவைக்கணும் அப்படின்னு கொஞ்சம் 'மார்ஜின்' விடலாம்.

**அமைச்சர் :** இந்த 'சஜஷன்' (யோசனை) நல்லா இருக்குது. 'ஒரிஜினல் சஜஷன்'. இதை நாங்க எக்சாமின் (பரிசோதனை) பண்ணிப் பார்க்கிறோம், இதைப் பண்ண முடியுமான்னு. இன்னொன்று கேக்கணும் உங்களை! இப்ப வந்து 'அபார்ஷன்' இருக்குது பாருங்க 'கருச்சிதைவு' இதுபற்றிப் பெரிய காண்ட்ரவர்சி (வாக்குவாதம்) சர்க்காரிலே. நாம 10 வருஷமா இதைப்பத்தி எழுதிக்கொண்டே வர்றோம். அவங்க சொல்றாங்க, இது 'அபார்ஷன்' லீகலைஸ் (சட்டபூர்வமாக) பண்ணிட்டா......" (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 1012–17)



1970 மார்ச்சில் நேரிட்ட [illegible] காலையின் போது பதிவான இந்த பகுதி அடங்கிய உரையாடல், முழுமையாக, 4.1.1970 இல் சென்னை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

இப்படிப்பட்ட அரிய யோசனையை, அப்படியே வரவேற்கும் தன்மையில் இந்தியக் குடிஅரசு தலைவரான வி.வி.கிரி 14.2.1974 இல் கருத்து வெளியிட்டுள்ளார் ('தினமணி', மதுரை, 16.2.1974)

**பெண் விடுதலை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் உரிமை இருப்பது ஒன்றே என்பதுதான் பெரியாரின் சீரிய கொள்கையாகும்.**

"நாம் சுதந்தரமுள்ள மக்களாக வாழவேண்டுமானால், நம் ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்துச் சுதந்தரத்தையும் சலுகைகளையும் நம் பெண்களுக்கு வழங்கி அவர்களுக்கு அவசியம் விடுதலை அளித்தல் வேண்டும்" என 26.11.1928 இல் ஈ.வெ.இரா. பேசினார்.

("If we are to be free, we must free our women who must be allowed the same liberty and privileges as our men"- Periyar E.V.R.'s speech on 26/11/1928, reported in "REVOLT", 12.12.1928)

ஆண், பெண் உரிமைகள் பற்றித் தந்தை பெரியார் தம் 16-ஆவது வயது முதலே (1895) சிந்திக்கத் தொடங்கினார் என அவரே கூறியிருப்பதை, ஏற்கெனவே கண்டுள்ளோம்.

அதன் விளைவாகப் பெண்களின் விடுதலைக்குத் தடையாகவும் தளைகளாகவும் உலகத்திலும், இந்தியாவிலும் உள்ள எல்லாச் சமூகங்களிலும் நிலவுகிற அனைத்துத் தடைகளையும் கண்டு அவை அனைத்தையும் நீக்க வேண்டும் என அவர் எழுதினார்; பேசினார்.

**இந்தியச் சமய–சமூகச் சீர்திருத்தக்காரர்கள், உலகச் சமூகச் சீர்திருத்தக்காரர்கள் ஆகியோர் பெண் விடுதலைக்கான சில கூறுகள் அல்லது பல கூறுகள் பற்றிக் கூறியுள்ளதை நாம் காண்கிறோம். ஆனால், பெரியார் ஈ.வெ. இராமசாமி பெண் விடுதலை பற்றிய எல்லாக் கூறுகளையும் குறித்துச் சிந்தித்துத் தெளிவான கருத்துகளை உலகுக்கு வழங்கிய சிறப்புக்கு உரியவராக விளங்குகிறார் என்பது ஓர் அரிய உண்மையாகும்.**

இதுபற்றி முதன் முதலாகத் தம் கருத்தை வெளிப்படுத்திய ச.வெ.இரா.

**"உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே சமத்துவம், சுதந்தரம் என்னும் முளை முளைக்கும் இடம்" (குடி அரசு 22.8.1926) எனக் கூறியுள்ளது. பெண் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரின் சிந்தனையையும் தூண்டுவதாகும்.**

காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறியிருந்தாலும், 1926 இறுதிவரை காங்கிரஸ்காரராகவும், காந்தியாரைப் போற்றுபவராகவும் இருந்த ச.வெ.இரா. குழந்தை விதவைகள் நிலை கண்டு காந்தியார் நெஞ்சம் குமுறி எழுதியதையே மேற்கோளாகக் காட்டித் தம் கருத்தையும் 'குடி அரசு' ஏட்டின் மூலம் புலப்படுத்தியுள்ளார். அது பின்வருமாறு:

'உலகிலேயே மிகப்பெரிய சீர்திருத்தக்காரரான மகாத்மா காந்தியடிகள் இந்து விதவைகளைப் பற்றி, அநேக சந்தர்ப்பங்களில் பேசியும், எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு 'நவஜீவன்' பத்திரிகையில் மகாத்மா எழுதியிருக்கும் விசயத்தைக் கவனித்தால், விதவைகளின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும். அக்கட்டுரையின் ஒருசில பாகமாவது:-

"பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று இறைவனுக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை என்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகாது. பலாத்காரத்தினால் அனுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. பதினைந்து வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிறாள் என்று சொல்லுவது, அவ்விதமாகச் சொல்லுவோரின் கொடூர சுபாவத்தையும் அறியாமையையுமே விளக்குகிறது." என்று எழுதிவிட்டு, விதவைகள் மறுமணம் செய்துகொள்ள வேண்டுமென்பதாகத் தம் உள்ளன்போடும் ஆவேச உணர்ச்சியோடும் மகாத்மா கூறிய மணிவாசகங்களில் ஒரு சிலவற்றைக் கவனிப்போம்:



அமைதியுடன் தங்களுடைய துக்கத்தைச் சகித்துக்கொண்டு தங்களுடைய உண்மையான கருத்தைத் தங்களின் பெற்றோர் அல்லது போஷகர்களான எதிர், புருஷர்களிடம் தைரியமாய்ச் சொல்லிவிட வேண்டும். அவர்கள் அதைக் கவனிக்காவிட்டால் தாங்களே, ஒரு யோக்கியமான புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்து கொள்ளட்டும். அதுவரையில் யோக்கியமான புருஷனை அடைய சாவித்திரி முதலியவர்கள்போல் தவம் செய்வதே ஏற்ற வழியாகும். விதவைகளின் போஷகர்கள் இவற்றைச் சரியாகக் கவனியாவிட்டால், பின்னால் பச்சாதாபப்படுவார்கள். ஏனெனில், நான் ஒவ்வோரிடத்திலும் துராசாரமே பார்த்துக்கொண்டு வருகிறேன். விதவைகளைப் பலாத்காரமாய்த் தடுத்து விதவைத் தன்மையை அனுஷ்டிக்கச் செய்வதால் விதவைகளுக்காவது, குடும்பத்திற்காவது அல்லது விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம்மூன்று தத்துவங்களும் நசிந்துவருவதை என் கண்களினாலேயே பார்த்துக் கொண்டிருக்கிறேன். பால்ய விதவைகளே! நீங்களும் உங்களைப் பலவந்தப்படுத்தி விதவைகளாக வைத்திருக்கும் எதிர் போஷகர்களும் இதை அறியுமாக". இவ்வாறாக, 1921 ஆம் வருடத்திய ஜன சங்கியைப்படி இந்துக் கைம்பெண்களின் தொகையினை நோக்குகையில் அய்யகோ! என நெஞ்சு துடிக்கிறது!

| | |
|---|---|
| 1 வயதுள்ள விதவைகள் | 597 |
| 1 முதல் 2 வயதுள்ள விதவைகள் | 494 |
| 2 முதல் 3 வயதுள்ள விதவைகள் | 1257 |
| 3 முதல் 4 வயதுள்ள விதவைகள் | 2837 |
| 4 முதல் 5 வயதுள்ள விதவைகள் | 6707 |
| **மொத்தம்** | **11892** |
| 5 முதல் 10 வயதுள்ள விதவைகள் | 85,037 |
| 10 முதல் 15 வயதுள்ள விதவைகள் | 2,32,147 |
| 15 முதல் 20 வயதுள்ள விதவைகள் | 3,96,172 |
| 20 முதல் 25 வயதுள்ள விதவைகள் | 7,42,820 |
| 25 முதல் 30 வயதுள்ள விதவைகள் | 11,63,720 |
| **ஆக மொத்தம் விதவைகள்** | **26,31,788** |

திருமணம் அல்லது கலியாணம் என்கிற அமைப்பு (Institution of Marriage) ஏன் ஏற்படுகிறது? அந்த முறை இல்லாமல் போவதற்கு எப்படிப்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பு வேண்டப்படுகிறது? என்பதை இதன் மூலம் தெளிவாக எடுத்துப் புலப்படுத்தியுள்ளார்.

**சோவியத்து நாட்டில் 1932 இல் ஈ.வெ.இரா. கண்டு வந்த ‘குடும்ப முறை’, 1970–80 வரை அங்கு நீடித்தது.**

இது குறித்த பின்வரும் செய்தி இக்கருத்தை உறுதிப்படுத்தும்:

“இருபதாம் நூற்றாண்டின் நடுக்காலப் பகுதியில் உழைப்பில் பெண்கள் பங்கேற்கிற நிலைமையைச் சோவியத்துப் புரட்சி உருவாக்கிவிட்டது. பெண்கள் உயர்கல்வி பெற வாய்ப்புக் கிட்டியது. ஓரளவேனும் சொந்தமான சுதந்தரத்தோடு பெண்கள் வாழ முடிந்தது. நானே அப்படிப்பட்ட திட்டத்தில் உருவானவள்தான். உண்மையிலேயே சோவியத்துப் பெண்களில் 90 விழுக்காடு பேர் முழு நேர வேலைகளைப் பெற்றிருந்தார்கள். சோவியத்து நாட்டில் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருந்தவர்களில் 55 விழுக்காட்டுப் பேர் பெண்களாக இருந்தார்கள்.

ஆட்சி அதிகாரத்தின் எல்லா மட்டங்களிலும் பெண்களுக்கென்று ஒதுக்கீடுகள் இருந்தன. இதனால் நாடாளுமன்றத்தில் நிறைய எண்ணிக்கையில் பெண்கள் இடம் பெற்றிருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பிலும் உயர்நிலைகளில் இல்லாவிட்டாலும் - பெண்கள் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றிருந்தனர். உள்ளாட்சி அமைப்புகளிலும் அப்படியே. ஆனால், நடைமுறையில் சோவியத்துப் பெண்கள் இரட்டைப் பணிச் சுமைகளை ஏற்க வேண்டியிருந்தது. முழு நேரப்பணி முடித்து வீடு திரும்பியதும் அங்கு வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது. ஏனெனில், அன்று வீட்டு வேலைகளைச் செய்வதற்கான சாதனங்கள் இல்லை. ஆட்சி அதிகாரத்தில் உயர் மட்டங்களில் இடம் பெற்றிருந்த சில பெண்களும்கூட வெறும் அடையாளச் சின்னங்களாகவே இருந்தனர் - உரிய அதிகாரம் பெற்றிருக்கவில்லை. சோவியத்து ஆட்சி வீழ்ந்த பிறகு, இரஷ்யப் பெண்களின் நிலைமை படுமோசமானதாக ஆகிவிட்டது. இன்றைய சந்தைப் பொருளாதாரத்தில் படித்த பெண்களுக்கு வேலை இல்லை. பல்லாயிரக்கணக்கான பெண்கள் வேலையை இழந்துவிட்டனர். ஆண்களின் ஆதிக்கத்தில் இயங்கும் புதிய முதலாளித்துவ நிறுவனங்கள், படித்த பெண்களைவிட - இளமையும், முடியழகும்,



நீண்ட கால் உயரமும் உள்ள பெண்களையே பணிக்கு அமர்த்துகின்றன. அரசாங்க நிர்வாகத்திலும், தேர்ந்தெடுக்கப்படுகிற அமைப்புகளிலும் பெண்களின் பங்கு மிகமிகக் குறைந்துவிட்டது. சோவியத்து ஆட்சிக் காலத்தில் இயங்கிய பகல் நேரப் பாதுகாப்பு விடுதிகளும், குழந்தைகளுக்கான இலவச மழலையர் பள்ளிகளும் மூடப்பட்டு விட்டன. இதனால் பணக்காரப் பெண்கள் தவிர மற்றெல்லாப் பெண்களும் வேறு வழியின்றிக் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு வீடுகளில் அடைந்து கிடக்க நேரிட்டுவிட்டது” என, இரஷ்யாவைச் சேர்ந்த டட்டியானா ஜெரமீனா என்னும் பெண்மணி இந்தியாவுக்கு 2000 டிசம்பரில் வந்திருந்தபோது விவரித்துள்ளார்.

By the mid-20th century the Soviet revolution had brought women into the work force, gave them access to higher education and atleast some means of personal independence. I myself am a product of that system. Infact, by the 1980s, over 90 percent of Soviet women worked full time, and 55 percent of all university graduates in the country were female.

There were quotas for women at all levels of power, ensuring plenty of female faces in parliament, the communist Party (though not at the highest levels) and local government. But in practice, Soviet women suffered under the "double burden", which ensured they would come home from of full day's work to find all the household tasks awaiting them. There were not a lot of consumer conveniences to ease the chores in those days.

The few women who did inhabit the USSR's upper corridors of power were often mere tokens, and their presence was about symbolism not substance. When the USSR fell apart, the lot of women worsened catastrophically. The new market economy didn't need educated women, and thousands of professionals lost their jobs. New male-dominated capitalist firms seem to prefer young, blonde and long-legged girls to educated ones. Female representation in government and elected bodies has plunged disastrously. Soviet-era daycare centres and free kindergartens were closed down, leaving all but the wealthiest working mothers with no alternative but to stay home with the kids.

("The Pioneer" Daily, New Delhi, 17-12-2000, page 11, Column 1)

**மேலே கண்ட செய்திகளைக் கொண்டு, “தனிச் சொத்துடைமை உள்ள நாட்டில் பெண்களுக்கு உரிய விடுதலை வந்து சேராது” என்று பெரியார் கொண்ட கருத்தும் முடிவும் சரியானது என்பதை உணர முடியும்.**

போட்டு, நான் அன்னிக்கே வந்து எழுதியிருக்கிறேன். இந்த மாதிரி குழந்தைகளைப் பெத்துக்கிட்டுச் சங்கடப்படறாங்க. இப்படிக் கிணத்துலே விழுந்துடத் துணிஞ்ச பொம்பளைகூட, 'இந்தப் புள்ளைகளை வெச்சுக்கிட்டு எப்படி நான் விழுகிறது? இதையும் போட்டுட்டு விழுறதன்னா புள்ளையைக் கொல்றதுன்னா, எனக்கு இதா இருக்குதே'ன்னு விசனப்படறான்னு வேடிக்கையா அப்ப வந்ததுதான்...

(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 1013)

அப்பெண்ணின் கூற்றைக்கேட்ட ஈ.வெ.இரா.வுக்குப் பளிச்சென ஒரு செய்தி புரிந்தது. கொடுமைப்படுத்தும் ஆண்களிடமிருந்து பெண்கள் விடுபடுவதற்குத் தடையாகவும், கெட்டியான ஒரு தளையாகவும் இருப்பது குழந்தைகளும், குட்டிகளுமே என்பதே அந்தப் புரிதலாகும். அப்போது தொடங்கி, 'பெண் விடுதலைக்குப் பிள்ளைப்பேறு ஒரு தளை' என்பதை இடைவிடாது வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சிகளிலும், மற்றச் சமூக நிகழ்ச்சிகளிலும் எடுத்துக் கூறுவதை அவர் மேற்கொண்டார். இதற்கு ஒரு செயல்முறை வழியாகக் 'கர்ப்ப ஆட்சி' அல்லது 'கர்ப்பத்தடை' என்கிற முறை சட்டப்படி ஏற்படுத்தப்படுவது பெண் விடுதலைக்கு இன்றியமையாத தேவை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஏற்கெனவே மேல நாட்டைச் சார்ந்த டாக்டர் மேரி ஸ்டோப்ஸ் என்கிற ஓர் ஆங்கிலேயப் பெண்மணி எவ்விதப் பழிக்கும் அஞ்சாமல் 'கர்ப்பத்தடை' பற்றிய பிரசாரத்தைத் துணிவுடன் மேற்கொண்டிருந்தார்.

ஈ.வெ.இரா. 1930 முதல் 'கர்ப்ப ஆட்சி'யின் முதன்மை பற்றிப் பின்வருமாறு எழுதவும், பேசவும் தலைப்பட்டார்.

"கர்ப்பத் தடையின் அவசியத்தைப் பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும் மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசமிருக்கின்றது. அதாவது, பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகின்றோம். மற்றவர்கள், பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும், குடும்ப சொத்துக் குறையாமல் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத் தடை அவசியம் என்று கூறுகின்றார்கள்.

இதை மேல்நாட்டினர் பலர்கூட ஆதரிக்கிறார்கள். ஆனால், நமது கருத்தோ இவை எதையும் முக்கியமாகக் கருதினதல்ல. மற்றெதைக் கருதி என்றால், முன்சொன்னது போல் பொதுவாகப் பெண்களின்



விடுதலைக்கும், சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால், சாதாரணமாய்ப் பெண்கள் பிள்ளை பெறுவதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்கின்றோம். அது மாத்திரமல்லாமல், பல பிள்ளைகளைப் பெறுகின்ற காரணத்தால் ஆண்களும்கூடச் சுயேச்சையுடனும் விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதன் உண்மையைச் சாதாரணமாய் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் சுதந்தரத்திற்குக் கஷ்டம் வருகிறது என்கிற காலத்தில் பேசிக் கொள்வதைப் பார்த்தாலே தெரியும்.

... உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டுத் தன் ஜீவனத்திற்கே – பொருள் தேடுவதற்கே சுதந்தரத்தை விற்று அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும்போது, பிள்ளைகளையும் குட்டிகளையும் காப்பாற்ற வேண்டிய அவசியமும் தலைமேல் இருக்குமானால், அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்க முடியும்? ஆகையால் ஆண், பெண் இருவர்களின் சுயேச்சைக்குமே கர்ப்பமாவதும், பிள்ளைகளைப் பெறுவதும் இடையூறான காரியமாகிறது. அதிலும் பெண்கள் சுயேச்சைக்குக் கர்ப்பம் என்பது கொடிய விரோதியாய் இருக்கிறது. அதனால்தான் நாம் கண்டிப்பாய்ப் 'பிள்ளை பெறுவதை நிறுத்தியே ஆகவேண்டும்' என்கிறோம்.

அன்றியும், பெண்கள் வியாதியஸ்தர்களாய் ஆவதற்கும், சீக்கிரம் கிழப்பருவம் அடைவதற்கும், ஆயுள் குறைவதற்கும் இந்தக் கர்ப்பம் என்பதே மூல காரணமாக இருக்கின்றது. தவிரவும், ஆண்களில் பிரமச்சாரிகளும், சந்நியாசிகளும் சங்கராச்சாரிகளும், தம்பிரான்களும், பண்டார சந்நியாசிகளும் ஏற்பட்டிருப்பது போல், பெண்களிலும் பிரம்மச்சாரிகள் ஏற்படுவதற்கு இந்தக் கர்ப்பமே தடையாய் இருந்து வருகின்றது. இந்தப்படி, நம்மில் ஒருவருக்கொருவர் கருத்தும் காரணமும் எப்படி இருந்தபோதிலும் கர்ப்பத்தடை என்பதில் அபிப்பிராய பேதமில்லாதிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்தத் தேசத்தில் பிறக்கும் குழந்தைகளை எல்லாம் இந்தத் தேசத்து அரசாங்கமே வளர்த்து, கல்வி கொடுத்து 'மேஜர்' ஆக்கிவிட வேண்டும் என்கின்ற ஒரு நிபந்தனை இருந்திருக்குமானால் – அப்படிக்கில்லாமல் யாரோ பெற்று யாரோ வளர்த்து மக்களைப் பெருக்கி அடிமைக்கு விடுவதனால் – சர்க்கார் எப்படி அதை வேண்டாம் என்று சொல்ல முன்வருவார்கள்? உண்மையான சுகாதாரத்தில் பிள்ளைப் பேற்றைத் தடுப்பது முக்கியமான சுகாதாரம் என்பதை டாக்டர் பட்டம் பெற்றவர்கள்கூட அறியாமல் போனது வருந்துவதற்குரியதாகும்.'

இருவரின் வணிகக் குடும்பத்துத் திருமண நிகழ்ச்சியே முதலாவது சான்றாகும் என்றும் நாம் கொள்ளலாம்.

**அதாவது பார்ப்பனரிடையே மட்டும் இருந்த வழக்கம் அரசர்க்கு வந்து, பின்னர் மூன்றாவது பிரிவினரான வணிகர்க்கு வந்தகாலம் சிலப்பதிகாரக் காலம் எனக் கொள்ளலே பொருத்தமாகும்.**

வருண ஏற்பாட்டு வாழ்க்கை முறையானது மேலும் பரவலாகச் சூத்திர வகுப்பார் பேரில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சுமத்தப்பட்டுவிட்டது என்பதைப் பின்வரும் கூற்றால் நாம் அறியலாம்.

**"மேல் மூவரும் மனம் புகல**
**வாய்மையான் வழி ஒழுகின்று"** - *(வாகைப்படலம்)*

என்பது புறப்பொருள் வெண்பாமாலை. இதன் பொருள், 'மேல வருணத்தார் மூவரும் மனம் மகிழும்படியாக அவர்களுக்கு அடிமை வேலை செய்வதே சூத்திரனின் கடமையாகும்' என்பதாகும். இது, "சூத்திரனுக்கு இந்த மூன்று வருணத்தாருக்கும் பொறாமையின்றிப் பணி செய்வதை முக்கியமான தருமமாக ஏற்படுத்தினார். இதனால் அவனுக்குத் தானம் முதலியனவும் உண்டென்று தோன்றுகின்றது" (மநு-அத்தியாயம் -1, சுலோகம் 91) என்னும் மநுநீதியின் மறு பதிப்பே ஆகும். நிற்க.

பெண்களுக்குக் காதல் உரிமை மறுக்கப்பட்டது என்பதை அடுத்து, அவர்களுக்கு இழைக்கப்பட்ட பெருங்கொடுமைகள் பலவாகும். அவை :

1. கற்பொழுக்கம் சுமத்தப்படல்
2. கைம்பெண் மறுமண உரிமை மறுப்பு
3. குழந்தைப் பருவ மணம்
4. மணவிலக்கு உரிமை மறுப்பு
5. சொத்துரிமை மறுப்பு
6. உடன்கட்டை ஏற ஊக்குவிக்கும் வழக்கம்
7. சமயச் சடங்குகள் செய்யும் உரிமை மறுப்பு
8. சாதி அல்லது வகுப்புத்தூய்மை கருதியும் கற்பு அல்லது பதிவிரதைத் தன்மை கருதியும் பெண்கள் கட்டாயமாகத் திருமணம் செய்விக்கப்பட வேண்டும் என்கிற நிலைமை.



9. தேவர் அடியார் என்னும் பெயரில் பொட்டுக் கட்டுதல்
10. மூடாக்குப் (பர்தா) போடுவதை வற்புறுத்தல்

இவையெல்லாம் பெண்களை அடிமைப்படுத்துவதற்கான நெறிகளாக வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் விதிக்கப்பட்டன. இவற்றைப் பற்றி நாம் நிரல்படக் காணலாம்.

## 9. பயிற்சி வினாக்கள்

1. குறிப்பு வரைக :
   (அ) காந்தர்வ முறை
   (ஆ) களவொழுக்கம்
2. "ஆண் ஆதிக்கம்" சமுதாயத்தில் தோன்றி நிலைபெற்ற விதத்தைப் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதுக.
3. இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு என்னென்ன உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குக.
4. தமிழரிடையே நிலவிய திருமண நடப்புப் பற்றி அறியப்படுவது யாது?
5. தொல்காப்பியம் மற்றும் பிற்கால நூல்களில் பயிலப்படும் நால்வருணம் பற்றிக் குறிப்பு வரைக.

பிள்ளையைப் பெற்றெடுப்பது இன்றியமையாதது என்று இந்துமத ஸ்மிருதிகளும், சுருதிகளும் விதித்தன. இதன் விளைவாக ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளும் வழக்கமும், ஆண்பிள்ளை பிறக்கிற வரையில் எண்ணிக்கை வரம்பில்லாத அளவு குழந்தைகளைப் பெறுவதும் இந்துக்களிடையே பெருவழக்கமாக இடம் பெற்றது.

தந்தை என்கிற நிலையில் உள்ள ஆணும், தாய் என்கிற நிலையில் உள்ள பெண்ணும் தங்கள் சொத்துக்கான ஓர் உரிமையாளனை - தங்களுக்கு மோட்சம் தேடித் தருவதற்குத் தகுதியுள்ள ஓர் ஆண் பிள்ளையைப் பெற முடிந்ததற்கு மகிழ்ந்தார்களேயல்லாமல், பல பெண்களை மணக்கிறோமே என்று ஆண்களும் வெட்கப்படுவதில்லை. ஆண் பிள்ளை வரும்வரை பல பெண்பிள்ளைகளைப் பெற்றெடுத்துத் தங்களின் உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறோமே என்று பெண்களும் கவலைப்பட்டதில்லை.

இந்தப் பன்மனைவியர் மணமும், பல பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் பழக்கமும் உலகம் முழுவதிலும் உள்ள இஸ்லாமியர்களிடையேயும் அப்படியே நீடித்தது. கிறித்தவர்கள் ஒரு பெண்ணை மட்டுமே மணக்க முடியுமென்றாலும், அவர்களும் பிள்ளைகள் பெறுவதில் எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை. நிற்க.

கிறித்து பிறந்த காலத்தில் உலகில் 20 கோடி மக்களே இருந்ததாகவும், உலக மக்களின் சராசரி வயது ஐந்து ஆக இருந்ததாகவும் அறிஞர்கள் முடிவுகட்டியுள்ளனர்.

கொடிய விலங்குகள், நச்சு உயிர்கள், தூய்மையற்ற தண்ணீர், நிலையற்ற இருப்பிடம், திடுமென நிகழும் இயற்கையின் சீற்றங்கள், உயிர்கொல்லி நோய்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற்கு வேண்டிய மருந்துகள், வைத்திய வசதி, கருவிகள் வசதி ஆகியவை நெடுங்காலம் மனிதனுக்குக் கிட்டவில்லை. எனவே, நோய்களால் சாவது குறைந்து மனிதனின் சராசரி வயது உயருவதற்கான வாய்ப்பு கி.பி. 1500 வரை மனித குலத்துக்குக் கிட்டவேயில்லை. அதன் பின்னர்த் தற்செயலாகவும், அனுமானத்தை முன்வைத்து ஆய்வு செய்தும் மனிதன் கண்டுபிடித்த மருந்துகளும், மின்னாற்றலும், மருத்துவம் செய்வதற்கான கருவிகளும், வேதிப்பொருள்களும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளும், சத்தான பொருள்களைத் தேடி உண்ணும் பழக்கமும் மனிதனின் ஆயுள் நீடிக்கப் பெரிதும் உதவின. இவற்றின் விளைவாக, 1000 குழந்தைகள் பிறந்தால், அவர்களில் 400-500 பேர்வரை 5 வயதுக்குள்ளாகவே செத்துப் போனார்கள் என்கிற நிலைமை மாறி, அப்படிச் சாவோரின் எண்ணிக்கை 1000-க்கு 100, 50 என்கிற அளவுக்கு மிக வேகமாகக்



குறைந்தது. கி.பி. 1700-க்குப் பிறகு இந்த வளர்ச்சி கடுவிசையில் மேல்நோக்கி வளர்ந்தது.

எனவே, கட்டுப்படுத்தப்படாத மக்கள் எண்ணிக்கை வளர்ச்சியானது மிகப்பெரிய வாழ்க்கைப் போராட்டத்துக்கும், உணவுப் பஞ்சத்துக்கும் மக்களை ஆளாக்கிவிடுமென்று அறிஞர்கள் அஞ்சினர்.

இச்சிக்கல் குறித்து முதன்முதல் துணிவாகத் தம் கருத்துகளை உலகுக்கு அளித்தவர் இராபர்ட் மால்தஸ் (Rabert Malthus) என்பவராவார். அவர் 1798 இல் 'மக்கள் பெருக்கக் கோட்பாடும் - சமூகத்தின் வருங்கால முன்னேற்றத்தை அது பாதிக்கும் விதமும்', என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதனையே மேலும் விரித்தெழுதி 1803 இல் வெளிப்படுத்தினார்.

மால்தஸின் கொள்கைப்படி, மக்கள்தொகைப் பெருக்கம் பரப்பியல் விகிதத்தில் (Geometric Progression) 1,2,4,8,16,32 எனப் பெருகுவதாகவும்; உணவுப் பெருக்கம் கூட்டெண் விகிதத்தில் (Arithmetic Progression) - 1,2,3,4,5,6 எனப் பெருகுவதாகவும் கருதப்பட்டது.

அவ்வாறு நேரிடுங்கால் வருங்கால சமுதாயம் உணவுப் பற்றாக் குறையினால் மிகப்பெரிய பாதிப்பு அடையும் எனவும், எனவே மக்கட் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். இந்நிலை குறித்து மிகப் பல வழிகளை அறிஞர்கள் குறிப்பிடுவராயினர்.

1910 இல் எட்மண்டு ரிகார்டு (Edmund Ricard) என்பவர், வயது முதிர்ந்தவர்களையும், சமூகத்திற்குப் பயன்படாதவர்களையும் அவர்களின் உறவினர்கள் கொன்றுவிடுவது இதற்கு ஒரு பரிகாரம் ஆகும் எனக் கூறினார்.

வேறுபலர் இல்லற வாழ்வில் ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்வதைக் கட்டுப்படுத்துவன் மூலமோ, நீண்ட இடைவெளிக்குப் பின் உடலுறவு கொள்வதன் மூலமோ பிள்ளைப் பேற்றைக் குறைக்க முடியும் எனக் கருதினர்.

அறிவியல் துறையில் விரைந்து முன்னேறிய மேலை நாட்டினர் கருத்தடை முறைகளை மேற்கொள்வதன் மூலம், மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்றனர்.

மேற்கண்ட கருத்துகள் பரவத் தொடங்கியவுடன் உலகெங்குமுள்ள மதத் தலைவர்கள் வன்மையாக இவற்றை எதிர்த்தனர்.

'மனிதனால் உயிரை ஆக்க முடியாது; ஆதலால் கருவைத்தடுப்பது அல்லது வளரும் கருவை மனிதன் சிதைப்பது கடவுள் கட்டளைக்கு

மதுவிலக்குப் பிரசாரத்தைவிட இந்தக் கர்ப்பத் தடைப் பிரசாரம் மிகவும் முக்கியமானதென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால், இந்தக் கர்ப்பத் தடைக்கு நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் பிரசாரம் செய்யப் பொது மக்களில் சிலராவது இதுசமயம் முன் வரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்."

('குடி அரசு' தலையங்கம் 6-4-1930;
பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 155-7)

1930 இல் 'கர்ப்ப ஆட்சி அல்லது கர்ப்பத் தடை' என்ற தொகுப்பு நூலை ஈ.வெ.இரா. வெளிப்படுத்தினார்.

காந்தியார் இதுபற்றிக் குழப்பமான எண்ணங்களை 1928 இல் வெளியிட்டுள்ளார். அவர், தம் "Young India - யங் இந்தியா" ஏட்டில் 26-4-1928 இல் குறித்துள்ளதாவது:

'பிறப்பைக் கட்டுப்படுத்துவது குறித்து இருவிதக் கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், பழங்காலந்தொட்டுப் பாரம்பரியமாக அதற்கென உள்ள முறையானது, உடலுறவு உணர்வைக் கட்டுப்படுத்திக் கொள்வது அல்லது பிரம்மச்சரியத்தை அநுசரிப்பது என்பதுதான். இது, பிழைபட முடியாத - மிகச் சக்திவாய்ந்த பரிகார முறையாகும். இதனை அநுசரிப்பவர்களுக்கு நன்மை தரவல்லதாகும். உடலுறவு என்பது போக இன்பம் பெறுவதற்காக உள்ளதன்று; பிள்ளை பெறுவதற்காக மட்டுமே உடலுறவு கொள்ளத்தக்கதாகும் என்பதாம்.

"There can be no two opinions about the necessity of birth control. But the only method handed down from ages past is self-control or *brahmacharya*. It is an infalliable sovereign remedy doing good to them who practice it. The union is meant not for pleasure but for bringing forth progeny"

(Source: "Population and planned Parenthood in India",
by Dr. S. Chandrasekar, 1955, p. 50-1.)

காந்தியாரின் மேற்சொன்ன அறிவுரை எந்த மனிதனுக்கும் காரிய சாத்தியமானதல்ல எனவும், சமூகத்திற்குப் பொதுவிதியாக ஆக்கப்பட முடியாதது எனவும், பிள்ளை பெறவே உடலுறவு என்பது பொருந்தாது என்றும் அறிஞர்கள் அவ்வப்போது குறிப்பிட்டுள்ளனர்.

சான்றாக, திரு. ஜவகர்லால் நேரு காந்தியாரின் மேற்கண்ட கருத்தைக் கண்டித்து, 1936 இல் அவருடைய தன் வரலாற்றில் எழுதினார் (An Auto-biography-London, 1936). இத்துறை பற்றி இதற்கு முன் நேரு சிந்தித்துக் கருத்து அறிவித்ததாகத் தெரியவில்லை.



பெரியாரின் கர்ப்ப ஆட்சி பற்றிய கருத்தை ஏற்று அன்று தொடங்கிச் செயல்பட்டவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில், பெரியாரும் அவர்தம் இயக்கத் தொண்டர்களுமேயாவர். 'சுயமரியாதை ஸ்தாபனம் என்பது கர்ப்பத்தடைப் பிரசார ஸ்தாபனம்' எனக் கருதப்படும் அளவுக்குத் தமிழகத்தில் பெரியார் இத்துறையில் ஆற்றியுள்ள பணி - இந்திய மக்களாலும், இந்திய - தமிழக அரசினராலும், உலகத்தினராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

அகில இந்திய அளவில் மக்கள் தலைவர்கள் என்போர், 1951 இல்தான், பம்பாயில் முதன்முதலாக, 'அகில இந்திய மக்கள்தொகை-குடும்ப நலத்திட்ட முதல் மாநாடு' எனக்கூட்டினர். இத் துறைபற்றிச் செய்திகளாகின என்பதும் அறியத்தக்கது.

எனவே, இத்துறையில், பெரியாரின் வேண்டுகோளை அப்படியே ஏற்றுச் செயல்படுத்துவதுபோல் - 1951க்குப் பின் செயல்படுத்தப்பட்ட நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாக்களை இந்திய அரசும் - மாநில அரசுகளும் வாரி வழங்கிச் செயல்படுகின்றன. தமிழகத்தார் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை வரவேற்று ஏற்கத்தக்க பக்குவம் உள்ளவர்களாகத் திகழ மூல காரணமானவர் பெரியார் ஒருவரே ஆவார்.

அன்றியும், ஐக்கிய நாடுகள் பெருமன்றமும் (U.N.O.) உலக வங்கி நிறுவனமும், உலக மக்கள் தொகை 1974இல் 390 கோடியாக வளர்ந்துள்ளது கண்டு அஞ்சி, இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண முனைந்து செயல்படத் தொடங்கியதும் உலகோர் அறிந்த ஒன்றாகும்.

இவ்வாறாக, உலகத்தைச் சூழ்ந்துள்ள ஒரு பெரிய அறைகூவலுக்கு 1930-லேயே இந்தியாவில் முதன்முதலாகச் சிறந்ததொரு பரிகாரம் கூறிய மேதையாவார் பெரியார். இத்துறை பற்றிய அவர்தம் இலட்சியம் பெண்ணடிமையை ஒழிப்பதும், மனித வாழ்வு துன்பமும் தொல்லையும் இன்றி அமைய வழி வகுப்பதுமேயாகும்.

பிள்ளைப்பேறு என்பது பெண்களை அடிமைப்படுத்துகிற வலிமையுடைய ஒரு தளையாக இருக்கிறது என்பதை உணர்ந்த ஈ.வெ.இரா. குடும்பக் கட்டுப்பாடு - கர்ப்பத்தடை எனும் சொற்களைப் பெரிய அளவில் கையாளாமல், 'கர்ப்ப ஆட்சி' என்னும் சொல்லைக் கையாண்டது மிகவும் நுட்பம் வாய்ந்தது. இது எதிர்மறையான உணர்வையோ, பொருளையோ தராமல் ஆக்க முறையிலான - தன்னுரிமையோடு கூடிய சிந்தனையை ஆணுக்கும், பெண்ணுக்கும் தூண்டுவதற்குத் துணை செய்யும் சொல்லாட்சியாகும். இது போற்றத்தக்க அணுகுமுறையாகும்.

ஒரு குழந்தையுள்ள விதவையை மணம் செய்துகொண்டால், 'குழந்தையே இல்லாத விதவை கிடைக்கவில்லையா?' என்றும், இதற்குமுன் பக்குவமான - சாஸ்திரயுக்தமான விதவையை கல்யாணம் செய்தபோது, 'பக்குவமாகாத விதவை கிடைக்கவில்லையா?' என்கிறார்கள். வேறு சாதியில் ஒரு விதவையை கல்யாணம் செய்து கொண்டபோது, நமது சாதியிலேயே ஒரு விதவை இல்லையா? என்கிறார்கள். இவ்விஷயங்களில் நாட்டு பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டு பயப்படக்கூடாது."

(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 141)

"ஒரு சமயம் விதவா விவாகஞ் செய்து கொண்டது குற்றம் என்று சொல்லப்படுமானால் அதுவும் அறியாமை என்றுதான் சொல்ல வேண்டும். உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் - எந்த மதத்திலும் விதவை மணம் ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

இந்தியாவிலும், இந்து மதத்திலுங்கூட அநேக சாதிகளில் விதவை மணம் அனுமதிக்கப்பட்டும் நடந்தும் வருகின்றது.

விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபச்சாரத்தனத்தைத் தூண்டவும், அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும்"

(காரைக்குடியில் 19.4.1935 இல் சொற்பொழிவு, 'குடி அரசு' 28.4.1935)

## 9.2.2. விபச்சாரம்

'விதவைத் தன்மையேதான் விபச்சாரம் என்கின்ற பிள்ளையைப் பெறுகின்றது. பிறகு, ஆண் எப்படி வேண்டுமானாலும் திரியலாம் - எவ்வளவு பெண்சாதிகளை வேண்டுமானாலும் மணக்கலாம் என்கின்ற முறையே விபச்சாரம் என்னும் அந்தப் பிள்ளையை வளர்க்கின்றது

கல்யாண ரத்து இல்லை என்கிற முறையானது, விபச்சாரத்தை நீடுழி வாழச் செய்கிறது. இவற்றிற்கு எல்லாம் பரிகாரம் செய்யாமல் விபச்சாரத்தைப் பற்றிப் பேசுவது என்பது பயனற்ற காரியமாகும்.

விதவைத்தன்மை என்பது நமது நாட்டில் மிகக் கொடுமையான முறையில் இருந்து வருகின்றது. இதை எந்தச் சீர்திருத்தவாதியும் கவனிப்பதேயில்லை. விதவைகள் வாழ்க்கை ஒரு சிறைக்கூட வாழ்க்கையை ஒக்கும். ஒரு கைதிக்குள்ள நிர்ப்பந்தம் ஒவ்வொரு விதவைக்கும் இருந்து வருகின்றது. எப்படி ஒரு கைதியானவன் சிறைக்கூட விதியை மீறவேண்டும் என்கின்ற ஆசைக்கும், அவசியத்துக்கும் உள்ளாகிறானோ, அது போலவேதான் ஒவ்வொரு விதவையும் விதவைச் சட்டத்தை மீறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு



ஆளாகிக் கஷ்டப்படுகிறாள். இந்தக் கொடுமை ஒரு நிரபராதியான பெண்ணுக்கு ஏன் ஏற்படவேண்டுமென்று கேட்டால், இதற்கு மனு மொழி இருக்கிறது' இந்த 20 ஆவது நூற்றாண்டில் தலைவிதி என்றும், கடவுள் செயல் என்றும் சொல்லி மக்களை ஏய்க்க முடியுமா?

விதவைத்தன்மை என்பது கடவுள் செயலாக இருந்தால், பார்ப்பனர்கள் நிறைந்த பார்த்தசாரதி கோவில் தெரு (சென்னை) தெப்பக்குளத்தில் தினம் ஒரு குழந்தை எப்படி மிதக்க முடியும்? ஊர்தோறும் குப்பைத் தொட்டிகளும், நடைபாதையோரங்களும், சாக்கடைகளும் எப்படிப் பிள்ளைகளைப் பெறமுடியும்?

ஆகவே, மனித சமூகத்துக்குக் கடுகளவாவது புத்தியும், நாணயமும் இருக்கிறது என்று சொல்லப்பட வேண்டுமானால், இந்த விதவைக் கொடுமை முதலில் ஒழிக்கப்பட்டாக வேண்டும். இந்தக் கொடுமை பகுத்தறிவுள்ள மனித சமூகத்தில் இருக்கிறது என்றால், பகுத்தறிவுக்கு இழிவு கற்பிக்க இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?' என்று கேட்கிறேன் ('குடி அரசு' - 16.6.1935; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 142-43)

இளம் வயது கைம்பெண்கள் வாழ்க்கையைத் துய்க்க எண்ணுகிறவர்கள். அவர்கள் பெற்றோராலும், உடன் பிறந்தோராலும், மற்றோராலும் தீண்டப்படத்தகாதவர் போல ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். முதலாவதாகத் திருமணம் செய்து கொள்ளுவோரும் கூட, அவர்களைப் பெண் கேட்பது இல்லை; இரண்டாவது மணம் புரியும்-மனைவியை இழந்த ஆடவரும் இவர்களை விரும்புவது இல்லை. இப்படிச் சித்திரவதை செய்யப்படுகிறவர்கள் அவர்கள் என்பதை நினைத்து நெஞ்சம் நெக்குருகிப் பாடுகிறார் சுயமரியாதை இயக்கப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1891-1964).

"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே - இங்கு
வேரிற் பழுத்த பலா
—"

வேரிற் பழுத்த பலாப்பழம் போன்ற கைம்பெண்கள் அவர்களுக்கான இன்பத்தை நுகர மறுமணம் ஒன்றே தீர்வு எனத் துணிந்த ஈ.வெ.இரா. இதற்காக இறுதிவரை பேசினார்; எழுதினார். பலருக்குத் துணை நின்று வாழ்க்கை ஒப்பந்தங்களை நிறைவேற்றினார்.

"கணவனை இழந்த பெண்ணை விதவை என்று அழைக்கிறார்கள். ஆனால் மனைவியை இழந்த கணவனை 'விதவன்' என்று அழைப்பதில்லை. இதுவே பெண்ணைவிட ஆணை உயர்த்திக் காட்டுவதாகும்.

இதை நம்பிய காரணத்தினால்தான் சமூகமும், பெண்களும் மேலே கண்ட கொடுமையான தன்மைகளை எதிர்த்துப் போராட முன்வரவில்லை. இத்தன்மை மேல்சாதியினரிடையே அன்றும் இன்றும் கொடூரமான வடிவில் உள்ளது.

நாரத ஸ்மிருதியை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "சூத்ர கமலா கர" (Sudra kamala kara) எனும் நூலில் சூத்திரர்களும், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட வகுப்பினரும் தங்கு தடையின்றி மணவிலக்குச் செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, மணவிலக்குச் செய்து கொள்ளுவது தகாது என்கிற எண்ணம் கீழ் வகுப்பு மக்களிடையே இல்லை. ஆனால், மேல் வகுப்பு மக்களிடையே இது நீடிக்கிறது.

('THE POSITION OF WOMEN IN HINDU CIVILISATION'
- Dr S. ALTAKER, 1983, p 83-87)

இத்தகைய நிலைமை முற்றிவிட்ட சமூகத்தில் பெண்களுக்கு மணவிலக்கு உரிமை எவ்வளவு இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி ஈ.வெ.இரா. பின்வருமாறு பேசியுள்ளதும், எழுதியுள்ளதும் சிந்தனைக்குரியவை.

"கலியாண இரத்து என்கின்ற ஒரு முறையும் ஏற்படுத்த வேண்டும். ஏனெனில், கலியாண இரத்துக்கு இடமில்லாத காரணத்தாலேயே ஆண்கள் மனைவிமார்களிடத்தில் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ளாமல் மிருகத்தனமாய் நடக்கத் தூண்டப்படுகிறார்கள்.

மனைவிமார்களைத் தங்களுக்குப் பிடிக்கவில்லையானால் ஆண்கள் மறுபடியும் மணம்செய்து கொள்கிறார்கள். மணமில்லாமல் வைப்பு முறையிலும் வேறு ஸ்திரிகளைச் சேர்த்துக் கொள்ளவும் செய்கிறார்கள். மற்றும் தங்களுக்கு இஷ்டமானபடியெல்லாம் நடந்து கொண்டு பெண்களை இம்சிக்கிறார்கள்.

**இவ்வளவுக்கும் தைரியம் வந்ததற்குக் காரணம், ஆண்கள் எப்படி நடந்துகொண்டாலும் மனைவிமார்களுக்கு ஜீவனாம்சம் கேட்கும் பாத்தியம் தவிர வேறு எவ்வித உரிமையும் இல்லாததேயாகும்.**

பெண்களுக்குத் தங்கள் கணவன் பிடிக்கவில்லையானால், சகித்துக்கொண்டு, தலைவிதி என்பதாகச் சொல்லித் திருப்தியுடன் இருக்க வேண்டியதைத் தவிர வேறு ஒரு கதியும் இல்லை. குரூர குணமுள்ள புருஷனை, குடிகாரப் புருஷனை, குஷ்டரோகியான புருஷனை முதலிய எப்படிப்பட்டவனாய் இருந்தாலும் அவனுடைய கொடுமைகளைச் சகித்துக் கொண்டு அவனுடன் கூடப் பெண் வாழ வேண்டியிருக்கிறது. இது ஜீவகாருண்யமாகுமா என்று கேட்கிறேன்"

('குடி அரசு' *16.6.1935*, பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். *143*)



ப்பதும் கூறுகிறார்

"விவாகரத்துச் சட்டமானால் உடனே எல்லாப் பெண்களும் தங்கள் கணவன்களை விட்டு ஓடிப்போவார்கள் என்றும், கற்புநிலை கெட்டுப்போகுமென்றும் பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோது பாதுகாப்பிற்கும், அவசியத்திற்கும் ஒரு சட்டம் செய்தால், பொதுஜனங்கள் எல்லோரும் அதே வேலையாய் இருப்பார்களென்பது நியதியல்ல. அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரந்தான் ஜனங்கள் அதனைக் கையாளுவார்கள். ஏனெனில், அதனால் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்களுக்குத் தாங்களே பாத்தியப்பட்டவர்கள் என்பது அநுபவத்தினால் மக்களுக்கு நாளடைவில் விளங்கிவிடும். ஆகவே, விவாகரத்து அனுமதிக்கப்படுமானால் ஏதோ ஆபத்து வந்துவிடுமென்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பது அவர்களது அநுபவத்தினால் ஏற்படக்கூடிய பயம் என்றுதான் சொல்லுவோம்.

**விவாகரத்துச் சட்டமாவது பெண்கள் சமூகத்திற்கு ஓர் இன்றியமையாத பாதுகாப்புக் கருவி என்பதே நமது முடிவான அபிப்பிராயம். புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பர அன்பும், சமமான வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமானால், இருவருக்கும் தனித்தனியாக உரிமை இருந்தால்தான் முடியும். இப்போதிருக்கும் இந்திய சமூகத்திலுள்ள மணவாழ்க்கை ஆனது பல வழிகளிலும், பெண்மக்களுக்குப் பாதகமான முறையிலேயே நடைபெற்று வருகின்றது. ஒரு புருஷன் தனக்குத் தேவை இல்லாதபோது தனது மனைவியை ஒதுக்கி வைத்துக்கொள்ள உரிமை அளித்திருக்கும் நமது சட்டமானது பெண்களுக்கு அதே உரிமையைக் கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இந்த உரிமை மனிதனுக்கு இருப்பதால் எல்லாப் புருஷர்களும் இதே வேலையாகவா இருக்கிறார்கள் என்றுதான் கேட்கிறோம்.**

ஆகவே, இதே உரிமையைப் பெண்மக்களுக்கும் அளிக்க வேண்டியது நியாயமும் கிரமமும் ஆகும் என்பதை இன்னும் ஏன் ஆண்மக்களில் சிலர் அறியவில்லை என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இந்த விவாக ரத்துத் தீர்மானத்தை, வைதிகப் பத்திரிகைகள்தாம் கண்டித்தனவென்றால், நமது ஜனநாயக தினசரியான 'ஜஸ்டிஸ்' (JUSTICE) பத்திரிகையும் கண்டித்ததுதான் நமக்கு விளங்கவில்லை. எது எப்படி ஆயினும், இந்தத் தீர்மானத்தின் அவசியத்தை நமது சுயமரியாதை இயக்கத்து அன்பர்கள் நன்கு அறிவார்களாகையால், இம்மாதிரியான சமத்துவமான நோக்கமுடைய விஷயங்களில் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், அதற்காக நாமோ நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களோ எங்கள் கடமையினின்றும் பின் வாங்கமாட்டோம் என்பதை மாத்திரம் உறுதி கூறுகிறோம்" (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். *146*)

முதலாவதாக, ஆண்களைப் போன்ற சொத்துரிமை பெறுவதற்கே செய்யப்பட வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமையிருந்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவிதமான அசவுகரியங்களும் ஒழிந்து போகும். கேவலம் தாசிகளுக்குச் சொத்துரிமை இருப்பதால் அவர்கள் தங்கள் குடும்பங்களில், தங்கள் சமுதாயத்தில் சுதந்தரமுடையவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால், எவ்வளவு ஸ்திரீகளுக்குச் சொத்துரிமையிருந்தால் எவ்வளவு மேன்மையாய் குடும்ப வாழ்க்கை நடத்துவார்கள் என்பது விளங்கும். அன்றியும், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படாததற்குக் காரணம் இதுவென யாரும் சொன்னதே கிடையாது.

பெண்களுக்குப் படிப்பு, தொழில் ஆகிய இவை இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டுவிட்டால், சொத்துச் சம்பாதிக்கும் சக்தி வந்துவிடும். பிறகு, தங்கள் கணவன்மார்களைத் தாங்களே தெரிந்தெடுக்கவும், அல்லது பெற்றோர்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும் கணவனோடு சுதந்தரமாய் வாழ்க்கை நடத்தவும் கூடிய தன்மை உண்டாகிவிடும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே மிகவும் முக்கியமான காரணம் என்பதே நமது அபிப்பிராயம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமான காரியமாகும். (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 166-70)

சொத்துரிமையை வழங்க மறுத்த தந்தை, தமையன், தம்பி, கணவன் என்கிற நிலையில் உள்ள எல்லோரும் ஆண்களே எனவே, இந்த உரிமைகளை மறுத்த ஆண் ஆதிக்கத்தையும், அந்த ஏற்பாட்டைப் பாதுகாத்திடும் அரசையும், இந்த இரண்டு ஏற்பாடுகளுக்கும் பாதுகாப்புக் கோட்டைகளாக இருக்கிற சாஸ்திர - புராண நெறிகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்து ஒழித்திடப் பெண்களே போராட வேண்டும் என்றும், இவற்றை எதிர்த்துப் போராட ஏற்ற கருவியான கல்வியைப் பெறுவதற்குப் பெண்கள் முந்தவேண்டும் என்றும் அதன்மூலம் தாங்களே சம்பாதியம் செய்வதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறிப் பெண்களை உசுப்பிவிட்டார், ஈ.வெ.இரா.

**சகோதரிகளே! நீங்கள் தழுவி நிற்கும் இந்துமத வருணாசிரம தர்மப்படி நீங்கள் சூத்திரச்சிகள்; பார்ப்பானின் தாசிகள் என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். கடவுள்களுக்கும் நீங்கள்தாம் தாசிகள். எந்தக் கடவுளும்**



**சூத்திரச்சிகளுடன்தான் லீலை செய்ததாகப் புராணக்கதைகள் கூறுகின்றனவே ஒழிய, எந்தக் கதையும் கடவுள் பார்ப்பனத்தியோடு லீலை செய்ததாகக் கூறக் காணோம். கடவுள் அவதாரமெல்லாம் நம்பெண்களின் கற்பைத்தான் சோதித்ததாகக் கதைகளில் கூறப்படுகிறதே ஒழிய - நம்மவரின் பெண்களைத்தான் கையைப் பிடித்து இழுத்துக் கற்பழித்ததாகக் கூறப்படுகிறதே ஒழிய - எந்தக் கதையிலும் பார்ப்பனப் பெண்கள் கடவுளால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படக் காணோம். அவ்வளவு இழிவுபடுத்திவிட்டார்கள், இந்த அன்னக்காவடிப் பார்ப்பனர்கள், நம்மை! இதை அறியாமல் நீங்கள் இன்னும் அவன் காலடியில் வீழ்ந்து காசு பணம் அழுது வருகிறீர்கள்.**

தாய்மார்களே! நீங்கள் எதையும் பகுத்தறிந்து பார்க்க வேண்டும். கல்லே கடவுள் என்று நம்புவதையும், பார்ப்பானைக் கடவுள் அவதாரம் என்று நம்பி அவனுக்கு அரிசி, பருப்பு அழுவதையும் அறவே விட்டொழிக்க வேண்டும். சாணி, மூத்திரத்தைக் கலக்கிக் குடிப்பது மதம் அல்ல; மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதுதான் மதம்; மனிதனை மனிதனாக மதித்து நடத்துவதுதான் மதம் என்பதை நீங்கள் உய்த்துணர வேண்டும். புராண சம்பந்தமான நாடகங்களுக்கோ, சினிமாக்களுக்கோ, புண்ணியஸ்தலங்களுக்கோ நீங்கள் கட்டாயம் போகக்கூடாது. இவையாவும் பார்ப்பனர்கள் உங்கள் காசைப் பறித்துச் சுகபோக வாழ்வு வாழ்வதற்கு வகுத்துக்கொண்ட வழிகள். நீங்களும் மேல்நாட்டுப் பெண்களைப் போலச் சகல உரிமைகளையும் பெற்று, இன்ப வாழ்வு வாழவேண்டும். அதற்கு நீங்கள் ஆண்களைப்போல் படிக்க வேண்டும். உங்களுக்குச் சட்டத்தின் மூலம் பல உரிமைகள் வரக் காத்திருக்கின்றன. இவ்வுரிமைகளை அனுபவிக்க உங்களுக்குக் கல்வி அறிவு அவசியமாகும். நகைகளிலோ, சேலைகளிலோ உங்களுக்குள்ள பிரியத்தை ஒழித்துவிடுங்கள்! இவற்றில் பிரியம் வைத்துக்கொண்டு இருப்பீர்களானால் ஜவுளிக்கடையிலும் நகைக்கடையிலும் சேலை விளம்பரத்திற்காக அவ்வப்போது வெவ்வேறு சேலை உடுத்தி வெவ்வேறு நகை மாட்டி வெளியே நிறுத்தி வைக்கும் வெறும் பொம்மைகள் போலத்தான் நீங்கள் ஆக வேண்டும்.

ஆகவே, அவ்விருப்பங்களை விட்டு, கல்வி அறிவில் விருப்பம் கொள்ளுங்கள். வீரத் தாய்மார்களாக ஆக விருப்பப்படுங்கள்! நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்களும் மற்ற ஆண்களும் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள் மீது பழி சுமத்தி வருகிறார்கள். அப் பழிச்சொல்லுக்கு ஆளாகாதீர்கள். எதிர்காலத்தில் - 'இவன் இன்னாருடைய மனைவி'

# 9.3. குழந்தை மணம்

## 9.3.1. குழந்தை மணம்

இந்தியாவில் குழந்தையாக உள்ள பெண்களை மணம் செய்து தரும் வழக்கம் ஏறக்குறைய கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. கவுதமர், விஷ்ணு, மனு முதலானவர்களின் ஸ்மிருதிகளை ஆதாரமாகக் கொண்டு இவ்வழக்கத்தை மேற்கொண்டனர்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும் இடையே மேலும் மேலும் திருமண வயது குறைக்கப்பட்டது. கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு குழந்தை மணமுறையே பெரிதும் ஆதரிக்கப்பட்டது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் குழந்தை மணமே பெரு வழக்கமாகிவிட்டது. யக்ஞவல்கியர், இயமா முதலானோர் இம்முறையை மிகவும் வலியுறுத்தினர்.

கி.பி. 8,9 ஆம் நூற்றாண்டுகளில் இது 12 வயது, 13 வயது என்பதிலிருந்து 9 அல்லது 10 வயது என்று குறைக்கப்பட்டது. அதனால் பெண்கள் கல்வி பெறும் வாய்ப்பு இயல்பாகவே தடுக்கப்பட்டது. குழந்தை மணத்தால் விளைந்த பெருங்கேடுகளுள் இது தலையாயது. எனவே, பெண்களில் பெரும்பாலோர் கல்வி அறிவு அற்றவர்களாகவே மாறி வந்தனர்.

இப்போது புழக்கத்தில் உள்ள பெரும்பாலான புராணங்கள் கி.பி. 4 ஆம் நூற்றாண்டுக்கும் 6 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் தொகுக்கப்பட்டவை. ஒவ்வோர் ஊரிலும் இருந்த மத குருமார்கள் எனப்படும் புராணிகர்கள், ஊராரைக் கூட்டிவைத்துப் புராணங்களைப் படித்துக் காட்டியும், விளக்கிப் பேசியும் வந்ததால் இராமாயணம், மகாபாரதம், அரிச்சந்திர புராணம், கருடபுராணம், அக்கினி புராணம், விஷ்ணு புராணம், மதன காமராசன் கதை, சித்திரபுத்திரன் கதை முதலான வற்றைச் செவி வழியாகக் கேட்டு அவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளக் கல்லாதோரும், கற்றோரும் பழகிவிட்டனர். கல்லாதவர்களும் பழைய காலப் பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ளுவதற்கும் பின்பற்றுவதற்கும் இது பெரிதும் காரணமாகிவிட்டது. அதனால்தான்



பழைய பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் மாற்றிக் கொள்ளுவதற்கு முன்வராத் தயக்கம் காட்டுவதில் பெண்கள் பெரும்பாலோராக இன்றும் இருக்கின்றனர். பழமையை மாற்றும் முயற்சிக்கு ஒரு தடைக்கல் போலவே பெண்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள். இந்தத் தன்மை கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு மிகப்பெரிய அளவில் நாடு முழுவதும் பரவிவிட்டது.

குழந்தை மணம் பெரிதும் மேல் வருணத்தாரிடமே பெருவழக்காக இருந்தது. பருவமடைவதற்கு முன்பே பெண்களுக்குத் திருமணம் செய்கின்ற வழக்கம் சத்திரியர்களிடையே கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை பெருமளவில் நிலவியது.

குழந்தை மணத்தின் கொடுமையையும், அதன் காரணமாகப் பெண்கள் கல்விபெறும் வாய்ப்பு மறுக்கப்படுவது, இளம் பருவத்திலேயே பிள்ளை பெறுவது, பிள்ளைப் பேற்றின்போது சாவது, விரைவிலேயே முதுமை அடைந்து இறப்பது முதலான கேடுகள் விளைவதையும் தடுக்கும் நோக்குடன், 1800 வாக்கிலேயே இந்தியாவில் வெள்ளையர் சில சட்ட ஏற்பாடுகளைச் செய்தனர். பெண்களின் திருமண வயது 10 என வரையறுக்கப்பட வேண்டும் என்பது அதன் நோக்கம்.

ஐரோப்பிய நாடுகளிலும் நீண்டகாலம் குழந்தை மணம் வழக்கத்தில் இருந்தது. இங்கிலாந்தில் மேல்தட்டு வகுப்பினரிடம் நான்கு, ஐந்து வயது குழந்தைகளை மணம் செய்து கொடுக்கும் வழக்கம் டியூடர் (Tudor) (கி.பி. - 1485-1603) ஆட்சிக் காலத்தில் நிலவியது. அத்தகைய பழக்கம் குறைந்து பெண்களுக்கு 12 வயது, ஆண்களுக்கு 16 வயது என்பது, 1929 வரையில் நிலவியது. 1929 இல் இங்கிலாந்து மக்களவையில் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் வாயிலாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமண வயது 16 என்று உயர்த்தப்பட்டது. அதே சமகாலத்தில்தான், இந்தியாவில் திருமண வயதை உயர்த்தும் 'சாரதா சட்டம்' இந்தியாவில் இந்திய முற்போக்குச் சிந்தனையாளரான சாரதா என்பவரால், இந்தியச் சட்ட மன்றத்தில் முன்மொழியப்பட்டது.

1891 இல், இந்தியாவில் பெண்களின் திருமண வயது 12 என்று வரையறை செய்யப்பட்டது. அதன் பின்னர் 1925 இல் பெண்களின் திருமண வயது 13 என உயர்த்தப்பட்டது. இத்துணை ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகும் குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்யப்பட்டு விதவை ஆனவர்களின் எண்ணிக்கை மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்பக் கூடிக்கொண்டே சென்றது.

["THE POSITION OF WOMEN IN HINDU CIVILISATION"
By Dr. S. ALTAKER, 1983 p. 135-95]

தமிழ்நாட்டிலுள்ள வன்னியர் வகுப்பாரில் ஒரு பிரிவினரிடையேயும் முக்குலத்தோர் வகுப்பாரில் ஒரு பிரிவினரிடையேயும், நாடார் வகுப்பில் ஒரு பிரிவினரிடையேயும், ஆதித்திராவிடர் வகுப்பினரிடையேயும் கைம்பெண் மறுமணம் நடைபெறுவது கண்கூடு.

டாக்டர் அம்பேத்கர் 1947 இல் முன்மொழிந்த இந்துச் சட்டத்திருத்த மசோதாவில் வரைவில் பல கூறுகள் ஏற்கப்பட்டு 18-5-1955 இல் சட்டங்களாக நிறைவேற்றப்பட்டன. அதன்படி கைம்பெண்களுக்கு மறுமண உரிமை சட்டப்படி அளிக்கப்பட்டுவிட்டது. ஆயினும், இது இன்னும் பெரு வழக்காக நடப்புக்கு வரவில்லை.

இப்படிப்பட்ட இந்திய சமூகத்தில் கைம்பெண் ஒருத்தி எவ்வளவு கொடுமைக்கு ஆளாகிறாள்; இளவயது கைம்பெண்ணின் மனநிலை எத்துணைப் பெரிய நம்பிக்கை இழப்புக்கு ஆளாகித் தவிக்கிறது என்பதை நேரிடையாகத் தம் குடும்பத்திலேயே ஈ.வெ.இரா. கண்டார்; மனம் நொந்தார். கைம்பெண்ணுக்கு நேரும் கொடுமையை நீக்கியே தீரவேண்டும் என்று அன்றே உறுதிபூண்டார்; அவ்வுறுதியைச் செயல்படுத்திக் காட்டினார்.

அதுபற்றி அவரே எழுதுகிறார்:

"இது போழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாகாதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த இழவன் மறுமணம் செய்து கொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த - மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச்செயலாகாது.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைவிப்பது ஆகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்காதிருத்தலினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமக்கலை கருதும் இளம் கைம்பெண்கள் படிற்றொழுக்கத்தில் விழுந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டொரு திங்களுள் 'சிசு ஹத்தி' தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும்? விதவைகள் மறுமணம் செய்து கொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று.

விதவைகளின் கலியாணத்தைப் பற்றி இவ்வாறு எழுதும் நான், எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா, அன்றிச்



செயலளவிலும் ஆதரித்துள்ளேனா என்ற ஐயம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேயும் எனது கருத்தைப் பிரதிபலிக்கும் செயல்களைக் கூற விரும்புகிறேன்.

நான் கருநாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். என் வகுப்பின் பெண்மக்கள் முக்காட்டுடன் - 'கோஷாவாக' இருக்க வேண்டியவர்கள் எனவும், விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாத வகுப்பினரெனவும் வழங்கப்படுவார்கள். நான் பிறந்த குடும்பமோ அளவுக்கு மிஞ்சிய ஆசாரத்தையும், வைணவ சம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம். இப்படி இருந்தபோதிலும், என்னுடைய 7-ஆவது வயதிலிருந்தே மக்களில் உயர்வு - தாழ்வு கற்பித்தலையும், ஒருவர் தொட்டதை மற்றவர் சாப்பிடலாகாதென்று சொல்வதையும் நான் பரிகாசம் செய்து வந்ததோடு, யாரையும் தொடுவதற்கும், எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் ஒருதும் பின்வாங்கியதே கிடையாது.

என்னை, இளம்போதிலிருந்தே எங்கள் வீட்டு ஆகுப்புரை*க்குள் செல்ல அனுமதிப்பதில்லை. நான் தொட்ட சாமான்கள் என் தகப்பனார் தவிர மற்றையோர் கழுவாமல் உபயோகப்படுத்த மாட்டார்கள். எங்கள் குடும்ப ஆசார அனுஷ்டானங்களைப் பார்த்து பொறாமைப்படுபவர்கள், என்னைப் பார்த்துச் சாந்தியடைந்து விடுவார்கள். 'நாயக்கருக்கு அவர்கள் ஆசாரத்திற்கு ஏற்றாற்போல்தான் ஒரு பிள்ளையென்றாலும் பிள்ளை, நவமணியாய்ப் பிறந்திருக்கிறது' என்று சொல்லுவார்கள். **என்னுடைய 16ஆவது வயதிலேயே பெண் மக்களைத் தனித்த முறையில் பழக்குவதும் - அவர்களுக்கெனச் சில கட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் ஆண்மக்களின் அகம்பாவம் என்று நினைத்து வந்தேன்.**

இவ்வாறாக, என் தங்கை பொன்னுத்தாய் தன் இளம் வயதிலேயே ஒரு பெண் குழந்தையையும், ஓர் ஆண் குழந்தையையும் விடுத்து விண்ணுற்றாள். அவற்றுள் அம்மாயி என்று அழைக்கப்பெறும் அப்பெண் குழந்தைக்கு அதன் 10 ஆவது வயதில் சிறந்த செலவோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60ஆம் நாள் அப்பெண்ணின் கணவன் என்னும் 13 வயதுள்ள சிறு பையன் பகல் 2 மணிக்கு 'விஷபேதி'யால் விண்ணுலகுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும், அப்பெண்குழந்தை என்னிடம் ஓடிவந்து, 'மாமா! எனக்குக் கலியாணம் செய்து வை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே'என்று 'ஓ'வென்று அலறிய சத்தத்தோடு என் [illegible] [illegible]

* ஆக்குப்புரை - சமையலறை

கர்ப்ப ஆட்சி பற்றி 1930 முதல் பேசி வந்த பெரியார், ஆண்–பெண் சேர்க்கை இன்றியே பிள்ளைப்பேறு கைகூடலாம் என்பதை 1943–லேயே எடுத்துரைத்தார்.

*1943 இல் ஒரு திருமண நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பின்காணும் செய்தியைத் தெளிவாகக் குறிப்பிட்டார்.*

"மனிதனுடைய ஆயுள் நூறு வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம்; இன்னமும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் – பெண் சேர்க்கை என்பதுங்கூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாக, பொலிகாளைகள் போல் தெரிந்தெடுத்த மனித போன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை 'இன்செக்ஷன்' மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண்–பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்புக் கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டு வந்துவிடக்கூடும். உல்லாச வாழ்வு என்பது தவிர, உலகக் குடித்தன வாழ்வு என்ற தன்மையே இருக்காது." ('திராவிட நாடு' 21, 28–3–1943); பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 2006–7)

*இக்கருத்துகளைத் திரட்டி, 'இனிவரும் உலகம்' என்ற பெயரில் சிறு நூலாக வெளியிட்ட ஈ.வெ.இரா. அந்நூலின் மேலட்டையில் (Wrapper) இரசாயன சோதனைக் குழாயில் (Test tube) மனிதக் குழந்தை வளருவது போல் ஓவியம் ஒன்றை அப்போதே வெளியிட்டுப் பாமரரையும் சிந்திக்க வைத்தார்; அறிவியல் அறிஞர்கள் என்போரைத் திணறச் செய்தார்.*

இவற்றைக் கொண்டு நாம் உணரவேண்டியது என்ன? வாழ்க்கைத் துணைவர்களாக ஆகும் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் பிள்ளை பெற்றுத் தீர வேண்டும் என்று கருதுவது எந்தச் சூழ்நிலையிலும், எப்போதும் – எவ்வளவு பொருத்தமான காரணம் இருந்தாலும், அவர்கள் பிரிந்து போக முடியாத ஒரு தளையைப் போட்டு இறுக்கிவிடுகிறது. பத்து மாதம் சுமந்து பெற வேண்டிய சிறப்பான பொறுப்பை ஏற்றிருக்கிற பெண், தேவை ஏற்பட்டாலும் அத்தளையை அறுத்துக் கொள்ள முடியாமல் ஓர் அடிமை போல் வாழ்ந்து தீர வேண்டிய ஒரு கட்டாயத்துக்கு அவரை ஆளாக்குகிறது. எனவே, பிள்ளைப் பேற்றுக்கு முதன்மை தருவது பெண் விடுதலைக்கு ஒரு தளையைப் போடுவதற்கே ஒப்பாகும். இதை ஆண்களும் பெண்களும் ஒருசேர உணர வேண்டும் என்பதை நாம் அறிய முடிகிறது.



## 9.6 பயிற்சி வினாக்கள்

1. குடும்பம், தனிச்சொத்து ஆகிய நிறுவனங்களின் தோற்றம் 'வாரிசுக்குப் பிள்ளை வேண்டும்' எனும் நிலையை உருவாக்கியது பற்றிக் குறிப்பு எழுதுக.
2. இந்து மதத்தினர் ஆண் பிள்ளை வேண்டும் என்று அவாவுவதற்கான காரணங்கள் யாவை?
3. ஆண் பிள்ளை வேண்டும் என்ற ஆசையால் விளையும் கேடுகள் யாவை?
4. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு மால்தஸ் கூறிய காரணங்களைக் கூறுக.
5. அதிகப் பிள்ளைப்பேற்றால் விளையும் தீமைகளைப் பட்டியலிடுக.
6. 'கர்ப்ப ஆட்சி' என்பதனை விளக்கி 1500 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.
7. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தக் காந்தியார், ரிகார்டோ ஆகியோர் கூறிய முறைகள் பொருந்தக்கூடியவையா? காரணத்துடன் விளக்குக.
8. 'பிள்ளைப் பேறு பெண் விடுதலைக்கு ஓர் இறுக்கமான தளை' என்பதனை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.
9. 'சோதனைக் குழாய்க் குழந்தை' பற்றி ஈ.வெ.இரா. கூறியுள்ளது என்ன? தற்போது ஏற்பட்டுள்ள அதற்கான சாத்தியக் கூறுகள் யாவை? இக்கருத்தை இந்தியாவில் முதன் முதலாகக் கூறியவர் யார்?
10. பெண் விடுதலைக்கான தளையை அறுப்பது பற்றிக் குறிப்பெழுதுக.

அல்லாமலும், இத்தகைய விதவைத் தன்மையானது, பிரஜா உற்பத்திக்குப் பெரிடராயிருக்கிறது. நமது இந்து மதத்திலிருந்து எவரேனும் இரண்டொருவர் பிற மதத்திற்கு மாற்றப்பட்டால் நம் மக்களுக்கு எவ்வளவோ துன்பம் தேடிட்டுவிட்டதாகக் கருதிப் பரிதாபப்படுகிறார்கள். இதன் காரணம், நமது மதத்தினரில் இருவர் குறைந்துவிட்டதால் இந்த சமூகத்திற்குக் கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிட்டது என்பதனாலேயன்றோ? அந்த நபர்களுக்காக இவ்வளவு துக்கமும், அபாயமும் ஏற்படுமானால் தற்காலம் நமது இந்திய நாட்டிலுள்ள இருபத்தாறு இலட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்தெட்டு விதவைகளும் கலியாணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவதாயிருந்தால் எத்தனைக் குழந்தைகள் பெறக்கூடும்? சராசரி மொத்தத்தில் மூவரில் இரண்டு பேர்கள் 2 வருடத்திற்கு 1 குழந்தை வீதம் பெறுவதாக வைத்துக்கொண்டாலும் தட்டை ஒன்றுக்கு 87,726 குழந்தைகள் வீதம் வருடம் ஒன்றுக்கு 4,38,631 பிரஜா உற்பத்தியை நாம் கெடுத்துக்கொண்டு வருகின்றோம்.

இது, இரண்டொருவர் மதம் மாறுவதால் நஷ்டம் வந்துவிட்டதாகக் கருதுவோருக்குப் புலப்படுவதில்லை. பாலமணம் அறாத 5 வயதிற்குட்பட்ட இளங்குழந்தைகள் மட்டிலும் 11,892 பேர் இருக்கிறார்கள் என்பதையும், தன் பிறவிப்பலனையே நாடுதற்கில்லாது இன்பத்துய்த்தற்கில்லாது அடக்கி வைக்கப்பட்டிருக்கும் 15 வயதிற்குட்பட்ட கைம்பெண்கள் 2,32,147 பேர் இருக்கிறார்கள் என்பதையும் கேட்கவே என் குலை நடுங்குகிறது. இத்தகைய பரிதாபமான விதவைத் தன்மையை எந்த நாகரிக உலகம் ஏற்கும்?

"விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜா ராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டு உழைத்தனர். இதுபோழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்."

('குடி அரசு' - கட்டுரை - 22.8.1926,
பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 137-139)

இந்தியாவில் ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு மேலாகப் பார்ப்பனர், சத்திரியர் ஆகியோரிடையே இருந்த குழந்தை மணவழக்கத்தைத் தடைசெய்யும் நோக்கத்துடனும், திருமண வயதை 14-க்கு மேல் உயர்த்தும் நோக்குடனும் இந்திய சட்டசபையில் 1928 இல் முன்மொழியப்பட்ட மசோதாவை எதிர்த்துப் பார்ப்பன சட்டசபை உறுப்பினர்கள் கூக்குரலிட்டனர். "சுதேசமித்திரன்" போன்ற பார்ப்பனப் பத்திரிக்கையாளர்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.



இதற்கு அவர்கள் முன்வைத்த காரணம் குழந்தை மணம் இல்லாவிட்டால் கற்புக் காப்பாற்றப்பட முடியாது ஒழுக்கத்தைக் காப்பாற்றுவது முடியாது என்பதேயாகும். இருதுப் பெண்கள் பருவமடைந்துவிட்டால் எங்கே வேறு வருணத்தாரோடு தொடர்புகொண்டு அதனால் வருண சங்கரம் (வருணக்கலப்பு) வருண ஒழிப்பு) செய்ய இடம் ஏற்பட்டுவிடுமோ என்று வெருண்டு, வருணத் தன்மையைக் காப்பாற்றும் நோக்கத்துடனேயே பார்ப்பனத் தலைவர்கள் கூக்குரலிட்டதைப் பெரியார் தக்க காரணங்களைக் காட்டிக் கண்டனம் செய்தார். அதனை நாம் இங்கு காணலாம்.

"உதாரணமாக, சாரதா மசோதாவை எடுத்துக் கொள்ளுங்கள். பெண்கள் பருவம் அடைந்ததற்குப் பின்னால் கலியாணம் செய்தால் சாஸ்திர விரோதமாம், பாவமாம், நரகம் கிடைக்குமாம். இதற்குச் சத்தியாக்கிரகம் செய்து உயிரை விடவேண்டுமாம். நீங்கள் இந்த வீரர்களை உண்மையானவர்கள் என்று நம்புகிறீர்களா?

இந்த வீரர்களின் ஆண்-பெண் கடவுள்களுக்கும், அவர்களது சொத்துக்காரர்களுக்கும் எப்போது கலியாணம் நடந்தது? கலியாணம் நடந்ததை இவர்கள் பார்க்காவிட்டாலும்-எப்போது நடந்ததாக இவர்கள் சாஸ்திரம் கூறுகின்றது என்பதைச் சற்று நினைத்துப் பாருங்கள்.

**சீதைக்கும், ருக்குமணிக்கும், சத்தியபாமைக்கும், பார்வதிக்கும், வள்ளிக்கும், தெய்வயானைக்கும், மீனாட்சிக்கும், ஆண்டாளுக்கும், நாச்சியாருக்கும், துரோபதைக்கும் எப்போது கலியாணம் நடந்ததாக இவர்கள் சாஸ்திரம் கூறுகின்றது? இவர்கள் பருவம் அடைந்த பிறகா? அதற்கு முந்தியா? என்று கேட்கிறேன்.**

பழைய இராஜாக்கள் என்பவர்கள் காலத்திலும், மத சம்பந்தமான புராணங்களிலும் எங்காவது 'ஏமனர்' பெண்களையோ, 10 வயதுக்குட்பட்ட பெண்களையோ கலியாணம் செய்து கொடுத்ததாக இவர்கள் சொல்லக்கூடுமா? என்று கேட்கிறேன். தவிரவும், மேற்கண்ட ஆண், பெண் கடவுள்கள் தாங்களாகவே கலியாணம் செய்து கொண்டார்களா? அல்லது அவர்களின் தாய் தகப்பன்மார் - கட்டுச்சாத மூட்டையைத் தோளில் சுமந்து திரிந்து மாப்பிள்ளை தேடி - சகுனம், குறி, சோதிடப் பொருத்தம் முதலியவை பார்த்துக் கலியாணம் செய்து கொடுத்தார்களா? என்று யோசித்துப் பாருங்கள்.

"செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் (1929) 'பெண்களுக்கும் ஆண்களுக்கும் கலியாண விடுதலை செய்துகொள்ள உரிமையிருக்க வேண்டும்' என்பதாக ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. பிறகு சென்னையில் கூடிய பெண்கள் மாநாட்டில், 'கலியாண ரத்துச் சட்டம் வேண்டும்' என்று தீர்மானித்து, சீர்திருத்தவாதிகளென்று தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள் உட்படப் பலர் கூடியே முழுவிடுதலை பெற்றதாகக் கருதப்பட்டார்கள். ஆனால், செங்கற்பட்டுத் தீர்மானத்திற்குப் பிறகு, வெளிநாட்டிலும் இந்தியாவிலும் பல இடங்களில் கலியாண ரத்துச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேல்நாடுகளில் ஒரு பெண் சாதியின் நடவடிக்கை சந்தேகத்திற்காகப் பல கொலைகள் நடந்ததாகவும் பார்க்கின்றோம். தெய்வீக சம்பந்தமான கலியாணங்கள் இப்படிப் புருஷன் மனைவி என்பதைப் பற்றித் தெய்வீகத்தில் பிரிவாதுமுள்ள என்றதற்கும் யோசிக்கப் புத்தியில்லை. பெண்கள் உலகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்களுக்கு மனிதத்தன்மையும், மனித உரிமையும், சுயமரியாதையும் ஏற்பட வேண்டுமானால், ஆண்களுக்குத் திருப்தியும் இன்பமும் உண்மையான காதலும் ஒழுக்கமும் ஏற்பட வேண்டுமானால் கலியாண ரத்துக்கு இடம் அளிக்கப்பட வேண்டியது முக்கியமான காரியமாகும். அப்படிக்கில்லாதவரையில் ஆண், பெண் இருவருக்கும் உண்மை இன்பத்திற்கும் சுதந்தர வாழ்க்கைக்கும் இடமே இல்லாமல் போய்விடும்.

ஆகவே, நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலிருப்பது போன்ற கலியாண ரத்துக்குச் சட்டம் சம்பந்தத்தில் ஏற்படாமல் போகுமாயின், கலியாண மறுப்புப் பிரசாரமும், கலியாணம் ஆண் புருஷர்களுக்கும் பெண்களுக்கும் பலதாரப் பிரசாரமுந்தான் செய்ய வேண்டியது வரும். அன்றியும், இது சமயம் ஒற்றுமைக்கும் திருப்திக்கும் இன்பத்திற்கும் உதவாத பெண்களுடைய புருஷர்கள் கண்டிப்பாகத் தைரியமாக முன்வந்து தங்களுக்கிஷ்டமான பெண்களைத் திரும்பவும் மணம் செய்துகொள்ளத் துணிய வேண்டும் என்றும் தூண்டுகிறோம். ஏனெனில், அப்படி ஏற்பட்டால்தான் தெய்வீகம் என்கின்ற பொய்யைச் சொல்லிக்கொண்டு புருஷர்களுக்கும் பெண்களுக்கும் சமத்துவமும், முன்பின் அறிமுகமும் இல்லாமல் செய்யப்பட்டு வரும் கலியாணங்களினால் மணமக்கள் அடையும் துன்பம் ஒழிபட முடியும். மனிதன் ஏன் பிறந்தான், ஏன் சாகிறான் என்பது வேறு விஷயம். ஆதலால், அது ஒருபுறமிருந்தாலும், மனிதன் இருக்கும்வரை அனுபவிக்க வேண்டியது இன்பமும் திருப்தியும் ஆகும்.

அப்படிப்பட்ட சாதனத்தில், இப்படிப்பட்ட தொல்லைக்கும் துன்பத்திற்குமிடமான இடையூறு இருக்குமானால், அதை முதலில்



களைந்தெறிய வேண்டியது அறிவுள்ள மனிதனின் முதல் கடமையாகும். ஜீவகாருண்யத்திற்கும் திருப்திக்கும் இன்பத்திற்கும் வேண்டியவர்கள் இதை முதலில் செய்ய வேண்டும். அப்படிக்கில்லாமல் ஏதோ கலியாணம் என்பதாக ஒன்றைச் செய்து கொண்டுவிட்டோமே, செய்தாகிவிட்டதே, அது எப்படி இருந்தாலும் சகித்துக் கொண்டுதானிருக்க வேண்டும் என்று கருதி, துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பதும், அனுபவித்துக் கொண்டிருக்கச் செய்வதும் மனிதத் தன்மையும், சுயமரியாதையுமற்ற காரியமாகுமேயல்லாமல், ஒரு நாளும் அறிவுடைமையாகாது என்பது நமது அபிப்பிராயமாகும்" (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 147-48).

### 9.4.2. மணவிலக்கு உரிமை

இவ்வளவு தடைகளையும் தாண்டி, 1955 இல் நிறைவேற்றப்பட்ட இந்துச் சட்டத்திருத்த மசோதாவின்படி மணவிலக்கு உரிமை இந்துப் பெண்களுக்குக் கிடைத்தது என்பது அறியத்தக்கது.

**விதவைகள் மறுமணம் செய்து கொள்ளுவதற்குச் சட்டத்தில் இடமிருந்தாலும் கல்வி அறிவு அற்ற பெற்றோர்களும், கல்வி அறிவு அற்ற விதவைகளும் சாதிக்கட்டுப்பாட்டுக்கு அஞ்சி விதவை மறுமணம் செய்வதைப் பெரிதும் இன்றளவும் பின்பற்றவில்லை என்பதே உண்மையாகும்.**

## 9.4 பயிற்சி வினாக்கள்

1. மணவிலக்கு குறித்துக் குறிப்பு வரைக.
2. மணவிலக்குக் கூடாது என்பதற்கு இந்து மதச் சாத்திரங்கள் கூறும் கருத்துகள் யாவை?
3. மணவிலக்கு உரிமையை மறுப்பதால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?
4. பெண்களுக்கு மண விலக்கு உரிமை வேண்டும் என்பதை ஈ.வெ.இரா. எப்படி வலியுறுத்துகின்றார்?

மேலும், மேற்கண்ட இரண்டு கொடுமைகளும் அழிக்கப்பட்டால் இந்தியாவிற்குப் பூரண சுதந்தரம் கேட்பதோ, இந்தியாவின் பாதுகாப்பையும், ஆட்சி நிர்வாகத்தையும் இந்திய மக்கள் தாங்களே பார்த்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லுவதோ ஆகிய காரியங்கள் முடியாதென்றும், முடியுமென்று யாராவது சொல்வதானால் அது அறியாமைத்தனமானதென்றும், இல்லாவிட்டால் - சுயநல சூழ்ச்சி கொண்ட நாணயத் தவறான காரியமாகுமென்றும் நாம் சொல்லி வருகிறோம் என்பதோடு, இப்படிச் சொல்லும் விஷயத்தில் நமக்கு பயமோ, சந்தேகமோ கிடையாதென்றும் சொல்லுகிறோம். ஆதலால்தான், இவ்வித முட்டாள்தனமானதும் சூழ்ச்சியானதுமான முயற்சிகளை நாம் எதிர்க்க வேண்டியவர்களாயுமிருக்கிறோம்.

**ஏனெனில், நம்மில் ஒரு கூட்டத்தாரையே நாம் நமது சமூகத்தாரென்றும், நமது சகோதரர்களென்றும் ஜீவகாருண்ய மென்றுங்கூடக் கருதாமல், நம் மக்களுக்கே நாம் விரும்பும் சுதந்தரமளிக்காமல், அவர்களை மனிதர்கள் என்று கூடக் கருதாமல் அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தித் தாழ்த்தி வைத்திருக்கின்றோம். ஆதலால், அத்தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தையோ விடுதலையையோ நம்மிடம் ஒப்புவிப்பதென்றால், கசாப்புக் கடைக்காரரிடம் ஆடுகளை ஒப்புவித்ததாகுமே தவிர, வேறல்ல என்று கருதுவதால்தானேயொழிய வேறல்ல.**

இவைகள் ஒருபுறமிருக்க மற்றும் பல நிலைகளிலும் பெண்களுக்குச் சுதந்தரங்கள் அளிக்க மிகப்பெரிய தடைகள் உள்ளன.

அவை என்னவெனில் :-

புருஷன் மேக வியாதிக்காரனாகவாவது, கொடிய தொத்து வியாதிக்காரனாகவாவது இருந்தாலும், வைப்பாட்டி வைத்திருந்தாலும் தாசி, வேசி வீடுகளுக்குப் போய்க் கொண்டிருப்பவனாயிருந்தாலும், மறுவிவாகம் செய்து கொண்டவனாயிருந்தாலும், கொடுமையாய் நடத்தினாலும், வேறு மதத்திற்குப் போய்விட்டாலும் புருஷனை விட்டுப் பிரிந்திருக்கவும், புருஷனிடம் ஜீவனாம்சம் பெறவும் மனைவிக்குப் பூரண உரிமை உண்டு என்பதாக ஸ்மிருதிகள் விதித்திருப்பதாகும்.

அதோடு, மேற்படி விஷயங்களை அனுசரித்து ஒரு மசோதாவும் அரசினால் தயாரிக்கப்பட்டிருக்கின்றதாகவும் காணப்படுகின்றது.

ஆகவே, இந்தச் சட்டம் அநேகமாகக் கூடிய சீக்கிரம் மைசூர் சமஸ்தான சட்ட சபையில் நிறைவேறிச் சட்டமாக்கப்படுமென்றே



நம்பலாம். இவற்றில் சொத்துகளின் அளவு விஷயங்களில் ஏதாவது வித்தியாசமிருந்த போதிலும் பெண்களுக்குச் சொத்துரிமைக் கொள்கையும், பெண்கள் புருஷனை விட்டு விலகி இருந்துகொள்ளும் கொள்கைகளும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் விஷயம் கவனித்துப் பாராட்டத்தக்கதாகும்.

இவைபோன்ற பல காரியங்களில், இந்தியாவிலுள்ள சுதேச இந்து சமஸ்தானங்களெல்லாம் ஒவ்வொரு துறையிலும் முன் வந்து சட்டம் செய்துகொண்டு வரும்போது, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள தேசியவாதிகளுக்கும், பூரண சுயேச்சைவாதிகளுக்கும், பொதுஜன நல உரிமைவாதிகளுக்கும் மாத்திரம் இக்கொள்கைகள் அவசியமானவை என்றோ, சட்டம் செய்யத்தக்கது என்றோ தோன்றப்படாமலிருப்பதானது - இக்கூட்டத்தார்களின் நாணயக் குறைவையும் பொறுப்பற்ற தன்மையையும் நன்றாகக் காட்டுவதற்கு ஓர் அறிகுறியாகும்.

சாரதா சட்டம் (குழந்தை மணத் தடுப்புச் சட்டம்) என்கிற ஒரு சட்டம் பிரிட்டிஷ் சர்க்கார் தயவினால் பாசாகியும், இந்திய தேசியவாதிகளாலும், பூரண சுயேச்சைவாதிகளின் முயற்சியாலும் அது சரியானபடி அமலுக்கு வர முடியாமல் முட்டுக்கட்டை போடப்பட்டு வருவதும், அச்சட்டம் கூடாதென்று வாதாடி ஒழிப்பதாகத் தெரியப்படுத்தியவர்களை இராஜாங்க சபைக்கும், மாகாண சபைக்கும் நமது பிரதிநிதிகளாக அனுப்பியதும் நம்மவர்களுக்கு மிகமிக மானக்கேடான காரியமாகும்.

நமது தேசியவாதிகள் என்னும் அரசியல்வாதிகள், இம்மாதிரிக் காரியங்களைச் சிறிதும் கவனியாமல் இருப்பதோடு, நாம் ஏதாவது இவற்றிற்காகப் பிரசாரம் செய்தால், “இது தேசியத்திற்கு விரோதம், சுய ராஜ்யம் கிடைத்துவிட்டால், பிறகு சட்டம் செய்து கொள்ளலாம்” என்று சொல்வதும், வேறு யாராவது இவைகளுக்காகச் சட்டம் செய்ய சட்டசபைக்கு மசோதாக்கள் கொண்டு போனால், “சீர்திருத்தங்கள் சட்டங்கள் மூலம் செய்துவிட முடியாது; பிரசாரத்தின் மூலம்தான் செய்ய வேண்டும் என்று சொல்வதுமான தந்திரங்களினால் மக்களை ஏமாற்றிக் காலம் தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.

ஆகவே, இந்த நிலைமையில் முதலில் நமது கடமையென்ன வென்பதை யோசித்துப் பார்த்தால், இம்மாதிரியான காரியங்களுக்கு ஆண்கள்தாம் முயற்சிக்க வேண்டியவர்கள் என்ற உரிமை முதலில் நீக்கப்படவேண்டும். நம் பெண்மணிகள் இக்காரியங்களில் வரிந்து கட்டிக்கொண்டு இறங்க வேண்டும். பெண்கள் கிளர்ச்சி

# 9.5. பெண்களுக்குச் சொத்துரிமை

"எப்போது புருஷன் - பெண்டாட்டி அந்த ஒரு ஒழுங்கு கட்டுப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால், தனக்கெனச் சொத்து நிலம் உடைமை தோன்றிய காலத்தில்தான்."..

"தனி உடைமை ஏற்பட்ட பிறகு சொத்துச் சேர்க்கிறான். தான் உயிருடன் இருக்கிறவரையில் அது அனுபவிப்பதாக இருக்கிறது. அவன் இறந்த பிறகு அந்தச் சொத்து யாருக்கோ பயன்படப் போகிறது. யாருக்கோ பயன்படுவதைவிட தனக்குப் பிறந்த குழந்தைக்குப் பயன்பட வேண்டும் என்று மனிதன் சிந்தித்து - சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாடாகத்தான், புருஷன் - பெண்டாட்டி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும். சொத்தில் இருந்துதான் இந்த முறை பிறந்திருக்க வேண்டும்."

- பெரியார்.

## 9.5.1. கணவன் - மனைவி முறை வராத

உலகம் முழுவதிலும் பெரும்பாலும் தந்தை வழிச் சமுதாய அமைப்பே நிறுவப்பட்டு நிலவித அமைப்பட்ட அமைப்பில் பெண்களுக்குச் சொத்துரிமை இருக்கவில்லை. அதைவிட கொடுமையான தன்மையில் பெண்கள் அனுபவிப்பதற்கு மட்டும் உரிய ஒரு பண்டமாகவும் அசையும் பொருளாகவும், ஆண்களுக்குரிய சொத்தாகவும் கருதப்பட்டனர்.

கிறிஸ்து காலத்திற்கு முன்னர், உரோம நாட்டின் பிரிவினர் (Frisians) உரோம அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளுக்குப் பதிலாகத் தங்கள் பெண்களையும், குழந்தைகளையும் கொடுத்தனர். டியூட்டானியர் (Teutons) பெண்களை அசையும் சொத்தாகவே கருதினார்கள். கி.பி. 11 ஆம் நூற்றாண்டு வரை அயர்லாந்தில் நிலவிய நிலப்பிரபுத்துவ ஆட்சியில் பெண்கள் வாரிசாக அடிப்படையில் நிலம் [illegible]



[illegible] பெண்கள் வெறும் போகப்பொருள் [illegible] இருந்தது [illegible]

[illegible] இருந்த [illegible] ஆட்சி [illegible] பெண்கள் [illegible] ஆக்கின

[illegible] சமுதாயத்தில் பெண்கள் வெறும் அனுபவிப்பதற்குரிய பண்டங்களாகக் கருதப்பட்டனர் [illegible] இருந்தது [illegible] நூற்றாண்டுகளுக்கான [illegible] பெண்களை [illegible] ஒரு [illegible]

[illegible] வேதத்தில் 10-ஆம் பகுதியில் [illegible] ஆம் [illegible]

கி.பி. முதலாவது இரண்டாவது நூற்றாண்டுகளில் [illegible] பெண்களும், குழந்தைகளும் [illegible] கருதப்பட்டது.

**இருப்பினும் மனு நீதியில் விதிக்கப்பட்டபடி தந்தையும் தாயும் இறந்தபின் மக்கள் மட்டுமே ஒன்றாகக்கூடிச் சொத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.**

**"தாய் தந்தை இருவரும் இறந்த பின், மைந்தர்களனைவரும் ஒன்றாகக் கூடி அவர்கள் சம்பாதித்து வைத்த ஆஸ்தியைப் பிரித்துக் கொள்க. ஏனெனில், தாய் தந்தையிருக்கையில் அவர்கள் பொருள் மைந்தர்களுக்குச் சொந்தமில்லையல்லவா?" மனு - அத்தியாயம் - 9. சுலோகம் 104**

**மனு விதித்ததைவிடக் கேவலமான தன்மையில், கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரம்' பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லை என விதித்துள்ளது.**

தாய பாகம் பகிர்ந்து இல்லை. (ஆனால்) தாயின் உடைமைப் பொருள்களில் பகிர் பெண்கள் உண்டென்றும் அன்னதும்

அசமமான வார்த்தைகளாகும் என்பதை வாசகர்களேதான் யோசித்துப் பார்க்கவேண்டும். இது பார்ப்பனர்களுக்காக என்றோ, அல்லது அவர்கள் கூட்டத்திற்காக என்றோ இருந்தால் அதைப் பற்றிப் பேசுவதற்கு நமக்கு அவ்வளவு கவலை இல்லை. ஆனால், நம் எல்லோருக்குமே பிரதிநிதி என்கிற முறையில் இருப்பதால் நாம் அதைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. நம்மில் அநேகர்கள் இதுவரை பெண்களை வயது வந்த வரையில் வைத்திருந்து விவாகம் செய்து கொடுத்திருக்கின்றார்கள் என்பதும், இப்போதுதான் வரவர பார்ப்பனர்களைப் பார்த்து அடிமைப்பட்டுப் பார்ப்பனர்களைப் போல் தாங்களும் உயர்ந்த ஜாதிக்காரர் என மதிக்கப்பட வேண்டும் என்கிற ஆசையில் பல சிறு பிராயத்திலேயே கல்யாணம் செய்துவிடுகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. திரு ஆச்சாரியாரின் வாக்குமூலப்படிக்குப் பார்த்தால், பக்குவமான பின்னோ, பக்குவமாகி 2 வருடம், 4 வருடம் பொறுத்தோ விவாகம் செய்யப்பட்ட பெண்கள் கற்பில்லாமல் விபசாரிகளாய் இருந்தே விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக ஏற்படுகிறது. திரு ஆச்சாரியார் ஒரு சமயம் தாம் மற்றவர்களைப் பற்றி அப்படிச் சொல்லவில்லையென்றும், தம்முடைய சமூகத்தைப் பற்றித்தான் தாம் சொல்வதாகவும் சொல்வாரானால், தம் சமூகத்துப் பெண்களும் பக்குவமடைந்து விட்டால் அவர்கள் கல்யாணமில்லாமல் கற்புடனிருக்க முடியாதென்று கருதிச் சொன்னவராகவே நினைக்க வேண்டியிருக்கிறது. இதனால் அவர்கள் எப்படியும் பெண்கள் சமூகத்தையே இழிவுபடுத்தியதாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு ஆச்சாரியார் இப்படிச் சொல்ல நேர்ந்தது அவரது பார்ப்பனீயத் தன்மையே ஒழிய வேறல்ல. ஏனெனில், பார்ப்பனீயத் தன்மையான இந்து மதம் என்பதில், பெண்கள் காவல் இல்லாமல் கற்புடனிருக்க முடியாது என்றே சொல்லப்படுகிறது. உதாரணமாக, இந்துக்கள் என்பவர்கள் கல்யாண காலத்தில் கல்யாணப் பெண்களுக்குக் கற்புக்கு உதாரணமாகக் காட்டி உறுதிவாங்க வழங்கும் மகா பதிவிரதையென்று சொல்லப்படும் அருந்ததி என்னும் உத்தம ஸ்திரீயின் யோக்கியதையைப் பார்த்தால், மற்றப் பெண்களுடைய நிலைமை தானாகவே விளங்கும். அதாவது, ஒரு சத்தியம் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் அருந்ததி சொல்வதாவது:

'ஸ்திரீகளுக்கு மறைவான இடமும், புருஷர்களின் சந்திப்பும் கிடைக்கும் வரையில்தான், ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க முடியுமாதலால், பெண்களை வெகு ஜாக்கிரதையாகக் காவல்காக்க



வேண்டும்' என்பதாகத் தேவர்களிடத்தில் சொல்லிச் சத்தியத்தைக் காப்பாற்றினதாக இருக்கிறது - இதுவும் கலியாணத்துக்கு ஆதாரமான ஒரு புராணம் சொல்லுகிறது. அதற்கு ஆதாரமாக மற்றொரு இடத்திலும் அதாவது திரௌபதையும் அருந்ததி சொன்னதையேதான் சொல்லி சத்தியத்தை நிரூபித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது 'ஆண்கள் இல்லாதிருந்தாலொழிய பெண்கள் கற்புடையவர்களாக இருக்க முடியாது' என்பதாய் பாரதத்தில் இதைப்பற்றிச் சொல்லுகின்றது - வசிஷ்டர், 'நல்ல மனைவியை அடைபவன்' - அதாவது 'அருந்ததிக் கொப்பானவள் சொன்னாள்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இங்கு திரு ஆச்சாரியார் சொன்ன மற்றொரு விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம். அதாவது, 'பால்ய விவாகம் செய்யாவிட்டால் நம்மு வாழ்க்கையில் துக்கம் ஏற்படும்' என்கிறார்.

என்ன துக்கம் ஏற்படும் என்பது நமக்கு விளங்கவில்லை. அதைப் பற்றி விவரிக்க நமக்கு வெட்கமாயிருக்கிறது. அறிவும், புருஷர்கள் சிறைக்குப் போய்விட்டால் பெண்களின் நடத்தை கேவலமாகிவிடும் என்றும் சொல்லுகிறார்.

இவை எவ்வளவு தூரம் பெண்களை இழிவுபடுத்துவதாகின்றது! இந்து மதமும், வேதமும், புராணமும், வைதிகமும், வருணாசிரமும் பெண்களை அடிமைப்படுத்துவதையும், கேவலப்படுத்துவதையும் அஸ்திவாரமாகக் கொண்டவையாதலால், இம்மாதிரியான வார்த்தைகள் நமது இந்தியச் சட்டசபைப் பிரதிநிதிகளிடமிருந்து வருவது ஒரு அதிசயமல்ல.

உதாரணமாக, கடவுளுடைய அவதாரமென்று சொல்லப்படும் இராமனே, கடவுள் பெண்சாதியின் அவதாரம் என்று சொல்லப்படும் சீதையின் கற்பில் சந்தேகப்பட்டு, அவள் நெருப்பில் போடப்படவும், பூமியில் புதைக்கப்படவும் செய்ததிலிருந்து, அந்தச் சீதையும் ஒரு சமயத்தில் புருஷனை விட்டுப் பிரியும்போது, 'இதோ பார்! நான் இப்பொழுதே கர்ப்பமாயிருக்கிறேன்' என்றும், 'இது புருஷனிடத்திலேயே உண்டான கர்ப்பம்' என்றும் வயிற்றைத் திறந்து காட்டியதோடு, தான் கொஞ்ச காலம் புருஷனைவிட்டு நீங்கி இருக்க நேருவதாலேயே தான் விபசாரத்தனம் செய்து கர்ப்பந்தரித்து விட்டதாகத் தன் புருஷன் கருதக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருப்பதிலிருந்தும், (வால்மீகி இராமாயணம்)

## 9.5 பயிற்சி வினாக்கள்

1. பெண்களுக்குச் சொத்துரிமை ஏன், எவ்வாறு மறுக்கப்பட்டது?
2. (அ) பெண்கள் சொத்துரிமை பெற, இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் யாவை?
   (ஆ) இச்சட்டங்கள் சரிவர அமல் ஆவதற்கு நீங்கள் கூறும் பரிந்துரைகள் யாவை?
3. பெண்களுக்குச் சொத்துரிமை வந்து சேரப் பெரியார் ஈ.வெ.இரா., டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் ஆகியோர் ஆற்றியுள்ள பங்குகள் யாவை?

## 9.6. பெண் விடுதலைக்கு ஒரு தளை

"குடும்பம், தனிச்சொத்து, அரசு" என்னும் அமைப்புகள் (Institutions) உருவானவுடன் குடும்பத்துக்கு ஒரு தலைவன், அரசுக்கு ஓர் உரிமையாளன், தனிச்சொத்துக்கு ஓர் உடைமையாளன் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிறது. தன் குடும்பம், தன் அரசு, தன் சொத்து என்று ஆன உடன், தன் வழி வந்த அல்லது தனக்குப் பிறந்த ஆணோ, பெண்ணோ குடும்பத் தலைவன், சொத்துக்கு உடையவன், அரசுக்கு உரிமையாளன் ஆவதற்கு வழிவகை செய்யப்பட்டது. இது உலகத்திலுள்ள எல்லாச் சமுதாயங்களுக்கும் பொதுவான நடப்பாகவே ஆகிவிட்டது. இதன் விளைவாகத் தனக்குப் பிறந்த பிள்ளை மட்டுமே தனக்கு உரிமையானவற்றை அடைய உரிமை உடையவன் அல்லது உடையவள் என்பது நிலைபெற்றது. பெரும்பாலான சமயங்கள் உரிமை இயல் பற்றிய இந்த நடப்புக்கு அங்கீகாரம் அளித்தன. அந்தந்தச் சமயத்துக்குரிய வேதங்கள், சாத்திரங்கள், கட்டளைகள் இவற்றிலும் இந்த நெறிமுறைக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. இதுவும் எல்லாச் சமயங்களுக்கும் ஏறத்தாழ ஒன்றுபோல இருந்தது.

பெரும்பாலான சமயங்களில் பெற்றோர்களுக்கு முக்தி அல்லது மோட்சம் அல்லது விடுதலை தேடித் தருவதற்காக அவரவருக்குப் பிறந்த ஆணோ, பெண்ணோ வேண்டும் என்பது முதன்மையான வாழ்க்கை நெறியாக வரித்துக் கொள்ளப்பட்டது. இதுவும் பிள்ளை பெற்றே தீர வேண்டும் என்கிற கடமையை ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும் சுமத்தியது. இந்தக் குடும்பங்களின் பேரில் வேறு ஒரு கொடிய மூடநம்பிக்கையையும் இது திணித்தது. அதாவது, பெற்றோருக்கு மோட்சம் அல்லது விடுதலை தேடித் தருவதற்கான சமச சடங்குகளையும், திதி முதலானவற்றையும் செய்வதற்கான உரிமை ஆண்பிள்ளைக்கு மட்டுமே உரியது என்று இந்து மதம் விதித்தது. எனவே எப்பாடுபட்டாவது, என்ன முறையைக் கையாண்டாவது, எத்தனை பெண்களை மணந்தாவது ஓர் ஆண்

பெறக்கடவள். (கருடவிலாம் - அதிகாரம் - 3, பிரகரணம் 4, அத்தியாயம் 63)

எல்லா ஸ்மிருதிகளிலும் கண்டிருக்கிறபடி பெண்கள், அடிமைகள், மாடுகள் முதலியவற்றை மனைக்கொண்டவராய் (தேவை) பெற்றுச் செல்வ உரிமை அளிக்கப்பட்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

ஸ்மிருதிகாரர்களில் யக்ஞவல்கியர் மட்டும் தந்தையின் சொத்தில் மகளுக்கு மூன்றில் ஒரு பங்கு கொடுக்கலாம் என விதித்துள்ளார். ஆயினும் தாயபாக இந்துச் சட்டப்பிரிவு நடப்பில் உள்ள வடமாநிலங்களிலோ அல்லது மிதாட்சர இந்துச் சட்டப்பிரிவு நடைமுறையிலுள்ள தென்மாநிலங்களிலோ இதன்படி ஒருபோதும் பெண்களுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு கொடுக்கப்படவில்லை. சொத்தைப் பொறுத்தவரையில் மிதாட்சரப்பிரிவு மிகவும் கொடுமையான வைதிகக் கோட்பாடுகளை மக்கள் மேரில் திணித்தது என்பது அறியத்தக்கதாகும்.

இந்துச் சமூகப் பெண்கள் வாழ்நாளில் எந்தப் பருவத்திலும் பொருளாதார உரிமையுள்ளவர்களாக வாழ முடியாத நிலைமையில் கொடுமையான விதிகளை மனுநீதி விதித்துள்ளது. இதைப் பின்வரும் மனுநீதி நூற்பா உணர்த்தும்:

> மாதர் இளமைப்பருவத்தில் பிதாவினாலும், யௌவனப்
> பருவத்தில் கணவனாலும், மூப்பில் மைந்தனாலும் காக்கத்
> தக்கவர். ஆகையால் எக்காலமும் மாதர் சுவாதீனமுடையவரல்லர்
>
> (மனுநீதி - அத்தியாயம் 9, சுலோகம் -- 3)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் விதிக்கப்பட்ட இத்தகைய கொடிய நெறி இந்துக்கள் எனப்பட்டவர்களில் செம்பாதிப் பேராக எப்போதும் இருக்கிற கோடானுகோடிப் பெண்களை 1955 ஆம் ஆண்டு வரையில் சொத்துரிமை அற்றவர்களாகவே வைத்திருந்தது என்பதை அறிந்தோர் நெஞ்சங்கள் குமுறும்.

அப்படிக் குமுறி எழுந்த பெண் விடுதலை வீரர்கள்தாம் மகாத்மா ஜோதிராவ் புலே, பண்டிதர் அயோத்தி தாசர், பெரியார் ஈ.வெ.இரா. டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் 1827-க்கும் 1973-க்கும் இடையே நம்மிடையே வாழ்ந்தோர் ஆவர்.

இங்கு, இந்துப் பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லாத இழிநிலையைப் பற்றியும், நம் மக்களில் ஒரு சாரார் தீண்டப்படாதவர்களாக நடத்தப்படுகிற இழிவை அடுத்து ஒழிக்கப்பட



வேண்டிய மாபெரும் இழிவு. பெண்ணுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டிருக்கிற கொடுமைதான் என்பதையும் வலியுறுத்தி ஈ.வெ.இரா. கூறியுள்ளதை நாம் காணல் பொருத்தம்.

## 9.5.2. சொத்துரிமை

நம்மிடையே ஒரு பகுதியினர் தீண்டப்படாதவர்களாக ஆக்கி வைக்கப்பட்டுள்ளனர். மக்களில் செம்பாதியர் பெண்கள் இவர்கள் அடிமைகள் போல ஆக்கி வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறிய அவர் இந்த இருசாராரின் விடுதலையை நோக்கமாகக் கொள்ளாத சுதந்தரம் எதற்கும் பயன்படாது என்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் இந்தியாவில் இதுபற்றிக் கவலைப்படாதவர்களாக இருந்த தேசியவாதிகளையும், சுதந்தரப் போராட்டக்காரர்களையும் ஈ.வெ.இரா. கேள்விக்கு உள்ளாக்கினார். அவர் கேட்டார்:

இந்திய நாட்டில், பெரும்பாலும் உலகத்தில் வேறு எங்குமில்லாததும், மனிதத்தன்மைக்கும் நியாயத்திற்கும் பகுத்தறிவிற்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும், அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகளல்லர் எனவும் – மனிதத் தன்மையும் நாகரிகமுமுடையதான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்படவும் மற்றும் உலகிலுள்ள பெரும்பான்மையான நாட்டார்களைப் போலவே அந்நிய நாட்டினர்களின் உதவியின்றித் தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆட்சி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ளவும் வேண்டுமானால் – முக்கியமாகவும் அவசரமாகவும் ஒழிக்கப்பட வேண்டியதாகவுமிருக்கும் கொடுமைகள் இரண்டு உண்டு.

அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பலகோடி எண்ணிக்கையுள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களிலும் இழிவாகவும் நடத்துவதாகும்.

இரண்டாவது எதுவென்றால், பொதுவாக, இந்தியப் பெண்கள் சமூகத்தையே அடியோடு பிறவியில் சுதந்தரத்திற்கு அருகதையற்றவர்களென்றும், ஆண்களுக்கு அடிமையாகவே இருக்கக் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்களென்றும் கற்பித்து, அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதாகும். ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவில் இனி, அரைக்கணம் கூட இருக்கவிடாமல் ஒழித்தாக வேண்டியவைகளாகும்.

எதிரானது' என அவர்கள் உரத்துக் கூறினர். இவ்வகையில் கிறித்தவர், இஸ்லாமியர், இந்து முதலான எல்லா மதவாதிகளும் - மருத்துவர்கள் என்போருங்கூட, ஒரே அணியில் நின்று எதிர்த்தனர்.

இந்தியாவில் இந்து மதம் விளைத்த கேடுகள் பற்றி ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ள செய்திகளைவிட மிகவும் வெறுக்கத்தக்கது ஒன்று உண்டு. அதாவது, 'புத்' என்னும் நரகம் உண்டு என்று கற்பனை செய்து, அந்த நரகத்தில் பெற்றோர்கள் விழாமல் தடுத்திட வேண்டி, 'புத்திரன்' ஒருவனைப் பெற்றெடுப்பது இல்லறத்தானின் மதக்கடமை என விதிக்கப்பட்டது. இதை நம்பிய ஒவ்வொருவரும் பல பெண் குழந்தைகளைப் பெற்றாலும், அதன் பிறகும் ஓர் ஆண்குழந்தை பிறக்கும் வரையில் பிள்ளை பெறுவதை நிறுத்துவது பாவம் என நம்பினர். மேலும் குழந்தை என்பது கடவுள் கொடுப்பது என்றும் நம்பினர். தன் கணவன் மூலம் ஆண் குழந்தையைப் பெற முடியாது என்று தெரிந்துவிட்டால், கணவனின் உறவுக்கார ஆண்கள் மூலமாவது ஓர் ஆண் குழந்தையைப் பெறவேண்டும் என்றும் சிலர் கருதினர். இத்தகைய மவுடீக நம்பிக்கைகளைக் கூர்ந்து கவனித்த ஈ.வெ.இரா., தற்செயலாக, 1925 வாக்கில் ஒரு நிகழ்ச்சியைக் காண நேர்ந்தது.

அது யாது என்பதை அவரே நினைவுகூர்கிறார்:

1970 மார்ச்சில், 'இந்திய அரசில் துணை அமைச்சராக இருந்த டாக்டர் எஸ். சந்திரசேகர், ஈ.வெ.இரா.விடம் நேர்காணல் செய்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றியாக நடைபெறுவதற்கான ஆலோசனைகளை அவரிடம் கேட்டார். அவ்விருவரிடையே அப்போது நடைபெற்ற உரையாடல் பின்வருமாறு:

**டாக்டர் சந்திரசேகர்:** குடும்பநலத்திட்டப் பிரச்சாரப் பணியில் தாங்கள் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறீர்கள். நான் நினைப்பது சரியாக இருந்தால் - 1920 களிலேயே குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டு இருந்தீர்கள். இந்தப் புத்தகத்தை எழுதவேண்டும் என்ற கருத்துத் தங்களுக்கு எப்படித் தோன்றியது என்று கூறினால் பரவாயில்லை.

**பெரியார்:** எனக்கு சின்ன வயசிலேயே ரொம்பச் செல்லப்பிள்ளை மாதிரி எல்லாரிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருந்தது. அதிலே, எனக்குக் கொஞ்சம் ரொம்ப வேகமான கருத்துகளெல்லாம் எனக்குத் தோணும். 'அது தப்பு, இது தப்பு'ன்னு கருத்துகளெல்லாம் எனக்குத் தோணும். அதை நான் சாதாரணமா, தைரியமா வெளியிடுவேன். அந்த முறையிலே மதசம்பந்தமா, இலக்கிய சம்பந்தமா - அது சம்பந்தப்பட்டவங்ககிட்டே வாதாடி, வாதாடி ஒரு மாதிரி - பொதுவா



சொன்னா, ஒரு வாயாடி என்ற நிலைமைக்குப் பேரு வாறபடி வாதாடிட்டு இருந்தேன். அதே போக்குலேதான் ஜனங்களோடே பழகும்போது இந்தப் பிள்ளைகுட்டி அதிகமாகப் பெத்துகிட்டு இருக்கிறவங்க படற கஷ்டம், நம்மகிட்ட வந்து முறையிடுகிற முறை, புருஷன்-பெண்சாதி சண்டை போட்டுக்கிட்டு வாற கலவரம் இதுகளையெல்லாம் நான் 'சீரியஸா'(Serious) கவனிக்கிறபோது, இந்தப் பிள்ளைங்களாலே பெரிய தொல்லை படறாங்க. இயற்கையா இருக்கிற தொல்லை தவிர, பிள்ளை குட்டிகளால் வேற தொல்லை படறாங்கன்னு கண்டேன்.

வேடிக்கையா சொல்றேன். 'குடி அரசு' ஆபீசிற்கு எதிர்த்தாப்பலே ஒரு வீடு. அவங்கே நம்ம சாதியில்லை. எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு மாதிரியான முறை. அண்ணன் - தம்பி, மாமன் - மச்சான்னு கூப்பிடுவோம். அந்த முறையிலே எதிர்த்த வீட்டுக்காரன் ஒருவன் - அவன் எனக்கு மாப்பிள்ளையா வேணும். அவன் மனைவிக்கு நான் அண்ணனா வேணும். இந்தமாதிரி இருக்கும் அவனுக்கு நாலு குழந்தை, கைக்குழந்தை ஒன்று. அந்த நிலையில் அவன் கோவம் வந்து பெண்டாட்டியைப் போட்டு அடிச்சப்புட்டான்.

அப்ப நான் இங்கிருந்து சிபாரிசுக்குப்போய், 'என்னடா' இந்த மாதிரி பண்றியே, கொன்றியே? குழந்தை குட்டிகளுக்கு இந்தமாதிரி பண்ணுறியே' அப்படின்னு ரொம்பக் கடினமாகக் கேட்டதுக்கு 'இதைப் பத்தியெல்லாம் நீ கேக்காதே'ங்குற அளவுக்கு வந்துட்டான். அந்தக் கோபத்தினாலே. அந்தம்மா அழுதுபுட்டுச் சொல்றபோது ஒரு வார்த்தை சொன்னா- 'இந்த மாதிரி இவருகிட்ட இன்னைக்கு நேத்திக்கல்ல - நான் படற அவஸ்தை; கொஞ்ச நாளாகவே ஒதை தின்னு தின்னு எனக்கு ரொம்ப வேதனையா போச்சு; அதனாலே போயி எங்காவது ஆத்தில் குளத்தில் இறங்கிடலாம்னு முடிவு; இதுகளை வச்சிக்கிட்டு நான் என்ன பண்ணட்டும்! இல்லாட்டா இதுகளையும் தள்ளிப் போட்டுல்ல நான விழவேணும். இந்தக் கொலைக்கு நான் ஏன் பாகப்படணும்? இந்த ஆன்கிட்டே உதை தின்னுகிட்டிருக்கேன். இல்லாட்டா நான் போய் விழுந்திடுவேன் ஆத்திலே' அப்படின்னு அவ சொன்னா

வாய்த்துடுக்கு முறையிலே, 'சரி ஏன் இப்படிப் பெத்தே நீ? உன்னை யாரு இவ்வளவு பெத்துக்கச் சொன்னா? பெத்துக்கிட்டுயே, வேதனைப் படறியே' அப்படின்னேன்.

அப்ப, அந்த அம்மா பேச்சோட பேச்சா, 'அது நம்ம செயலில்லே, அது பகவான் செயல் அப்படிப் பண்ணிட்டது. நான் என்ன பண்ணட்டும்?' அப்படின்னு சொன்னா. அப்பதான் அந்தப் பகவான் செயலைக் கண்டிக்கப்

திரு ஆச்சாரியார், மற்றப் பெண்கள் புருஷனை விட்டு நீங்கி இருந்தால் ஒழுக்கம் கெட்டுவிடுவார்கள் என்று சொல்லவில்லை. ஆச்சாரியாரும் இல்லை.

ஆனால் இவைகள் மனிதத் தன்மைக்கு ஏற்றதான வாதங்களாகுமா என்றும், நமது பெண் சகோதரிகளுக்கு நியாயம் செய்ததாகுமா என்றும் கேட்கின்றோம்.

இதைக் கேட்ட அந்நிய நாட்டார்கள் என்ன நினைப்பார்கள்?

எனவே, நமது மக்களின் முன்னேற்றத்திற்கும், மனிதத் தன்மைக்கும் ஏற்றதான சீர்திருத்தங்களை செய்யப் புறப்படும்போதெல்லாம், இப்படி ஒரு கூட்டத்தார் இருந்துகொண்டு, நம்மை இழிவுபடுத்தி முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வருவதை இனி எத்தனை காலத்திற்குத்தான் நாம் பொறுத்துக் கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 130-31

எனவே, பால்ய விவாகம் என்கிற குழந்தை மணம் பெண்களை வதைத்து அடிமைகளாக ஆக்குவது என்பதையும், அது மதம், சாஸ்திரம், வைதிகம் என்கிற பேரில் இன்றுங்கூடக் காப்பாற்றப்படுவது தவறு என்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

## 9.3 பயிற்சி வினாக்கள்

1. குழந்தை மணத்தின் தீமைகளை விளக்கி ஒரு கட்டுரை எழுதவும்.
2. "சாரதா சட்டம்" நிறைவேற்றப்பட இருந்த எதிர்ப்புகளை விளக்கவும். அச்சட்டம் எப்போது நிறைவேற்றப்பட்டது என்பது பற்றியும் விளக்கிக் கூறவும்.

# 9.4. மணவிலக்கு உரிமை

"கலியாண இரத்துக்கு இடமில்லாத காரணத்தாலேயே ஆண்கள் மனைவிமார்களிடத்தில் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ளாமல் மிருகத்தனமாய் நடக்கத் தூண்டப்படுகிறார்கள்."

— ஈ.வெ.இரா

## 9.4.1. மணவிலக்கு

கி.பி. 200-க்கும் 1200-க்கும் இடையில் உருவாக்கப்பட்ட சாஸ்திரங்கள் ஓர் ஆடவன் தன் முதல் மனைவி உயிரோடு இருக்கும்போதே அவளுக்கு மணவிலக்குத் தராமலும், அவளைப் புறக்கணித்துவிட்டும் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்பதை ஒரு வாழ்க்கை நெறியாக வரையறுத்தன.

கி.பி. முதலாவது ஆயிரமாண்டில் தொடங்கியே பெண்கள் மணவிலக்குப் பெறுவது தடுக்கப்பட்டுவிட்டது என்றும் கீழ்சாதி மற்றும் உழைப்பாளி வகுப்பு மக்களிடையே மணவிலக்குத் தொடர்ந்து நீடித்து வந்தது. இன்றும் நீடித்து வருகிறது. மணவிலக்கு உரிமை அளிக்கப்படாமல் அப்படி பலமனைவியர் மணம் என்பது தடுக்கப்படவில்லை. மேலும் விரும்பப்படாத அல்லது கொடுமைப்படுத்துகிற கணவனோடு இருந்து வாழுகிற துன்பத்திலிருந்து மனைவி விடுதலை பெறவே இயலாது.

இதன் விளைவாக அலியாகவும், பைத்தியக்காரனாகவும், தீராத நோயாளியாகவும், மனத்துக்குப் பிடிக்காதவனாகவும் உள்ள ஒருவனை மணந்துகொண்ட பெண்கூடத் தன் கணவனிடமிருந்து மணவிலக்குப் பெறமுடியாத கொடுமையான நிலைமை ஏற்பட்டது. மநுநீதியில் பாகம், சுலோகம் 79 இல், மேலே கண்டவாறு உள்ள கணவனிடமிருந்து மணவிலக்குப் பெறலாம் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அதே பாகம் 9 இல் சுலோகம் 46 இல், கணவன் என்பவன் மனைவியை விற்கலாம்; மனைவியைக் கைவிடலாம். அதனால் பின்னரும் மண உறவு அறுபடாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

மணவிலக்குக் கூடாது என்பதற்கு மிகவும் கெட்டியான அடித்தளமாக இருப்பது 'திருமணம் ஒரு புனிதச் சடங்கு' என்கிற கோட்பாடேயாகும்.

இப்பொழுது அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். விரும்பினால் எப்பொழுதும் சீர்திருத்தத்தை எதிர்த்தே வருகிறார்கள். கற்பு அல்லது ஆண் பெண் ஒழுக்க விஷயமாகத் தற்காலம் இருந்துவரும் ஏற்பாடுகளே சரியானவை என்றும், அவைகளை மாற்றினால் சமூகமே அழிந்துவிடும் என்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

எனவே, தற்காலம் அமலில் இருந்துவரும் ஆண் பெண் ஒழுக்கம் சம்பந்தமான ஏற்பாடுகளைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

'கற்பு உணர்ச்சி' உலகம் முழுவதும் ஒரே சீராக இருக்கவில்லை. ஒரு தேசத்தில் நல்லொழுக்கமென மதிக்கப்படுவது வேறொரு தேசத்தில் கூட துர்ஒழுக்கமாக எண்ணப்படுகிறது. பொதுவாக, பெண் புருஷனின் அடிமை என்றும், போகப்பொருள் என்றும், அவளைப் புருஷன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்றும் உலக மக்கள் ஒருகாலத்தில் நம்பியே வந்திருக்கின்றனர்." (பகுத்தறிவு 1936 மலர் 1, இதழ் 3, பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 110, 111)

உலகிலுள்ள ஆண், பெண் எல்லோருக்கும் இருக்கின்ற கறைகளும் குறைபாடுகளும் ஒரே தன்மை வாய்ந்தவையாகும். தனியுடைமைச் சமுதாயத்தில் இது பேருண்மை. உண்மை இவ்வாறு இருக்க, திருமணத்திற்குத் தொடர்பில்லாத கற்பு என்பது பெண்கள்மேல் மட்டும் சுமத்தப்பட்டிருப்பதைக் கூர்ந்து ஆய்ந்த ஈ.வெ.இரா. பெண் ஆணுக்குரிய ஒரு சொத்துப் போலவும், ஒரு நுகர்வுப் பொருளாகவும் கருதப்பட்டு, தனக்கே உரியவளாக இருக்க வேண்டும் என்கிற தனியுடைமைச் சிந்தனையோடு ஆண் வாழ்வதுவே பெண்ணடிமைக்குக் காரணம் என்பதைக் கண்டார்.

எனவே, தனியுடைமைச் சமூக அமைப்பை ஒழிப்பது என்பதே பெண்ணின் பேரில் மட்டும் சுமத்தப்பட்டிருக்கும் இந்தச் சுமையை அகற்றிட ஒரே வழி என்பதை அறுதியிட்டுப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"பெண்மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது, மேல்சாதிக்காரன் கீழ்சாதிக்காரனை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட, எசமான் அடிமையை நடத்துவதைவிட மோசமானதாகும்.

அவர்கள் எல்லாம் இருவருக்கும் சம்பந்தமேற்படும் சமயங்களில் மாத்திரந்தான் தாழ்மையாய் நடத்துகின்றார்கள்.

ஆனால், ஆண்களோ பெண்களைப் பிறவி முதல் சாவு வரை அடிமையாயும் கொடுமையாயும் நடத்துகின்றார்கள். நாம் எல்லோரும்



தாய் வயிற்றில் பிறந்து அடிமைகளாய் வளர்க்கப்பட்டோம் என்பதை மறுக்கின்றீர்களா?"

"திருமணத்திற்குச் சம்பந்தப்படாத 'கற்பு' என்பது ஒன்று பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டிருக்கிறது. கற்பு என்பதைச் சுகாதாரத்தையும் சீர்த்தையும், பொது ஒழுக்கத்தையும் பொறுத்து நான் ஆதரிக்கிறேன் என்றாலும், இன்று அந்த முறையில் கற்புக் கையாளப்படுவதில்லை. உதாரணம் என்னவென்றால் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப்படுவதில்லை என்பதிலிருந்தே இதை உணர்ந்து கொள்ளலாம். அதற்கு மேலும் உதாரணம் என்னவென்றால், இந்துக் கடவுள்கள் என்பவற்றுக்குக் கூட ஆண் கடவுள்களுக்குக் கற்பு வலியுறுத்தப்படுவதில்லை. ஆதலால் அந்த - அதாவது 'ஒரு பிறவிக்கு ஒரு நீதி' என்கின்ற கற்பு முறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

"இந்தத் தனியுடைமை தேசத்தில் இது ஒழிக்கப்படுவது என்பது சுலபத்தில் ஏற்படக்கூடிய காரியம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கின்ற தத்துவமே தனியுடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது.

ஏன் என்றால், பெண் ஆணுடைய சொத்து என்பதுதான் இன்றைய மனைவி என்பவர்களின் நிலைமை."

"தனியுரிமை உலகில், பெண்கள் சுதந்தரம் வேண்டுமென்பவர்கள் பெண்களை நன்றாய்ப் படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண்பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல் பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்கவேண்டும். வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக்கொடுக்க வேண்டும். தாய், தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் 'பிடித்துக் கொடுப்பது' என்று இல்லாமல், அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்டபிறகு - ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், 'கன்னிகாதானம்', 'கலியாணம்', 'தாரா முகூர்த்தம்' என்கின்ற வார்த்தைகளே மறைந்து - அகராதியில் கூட இல்லாமல் ஒழிய வேண்டும். அன்றுதான் பெண்கள் சுதந்தரம் அனுபவிக்க இலாயக்கு உள்ளவர்கள் ஆவார்கள்" (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 108, 109)

# 9.1. கற்பொழுக்கம்

"ஒரு பிறவிக்கு ஒரு நீதி" என்கின்ற கற்புமுறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். இந்தத் தனி உடைமைத் தேசத்தில் இது ஒழிக்கப்படுவது என்பது சுலபத்தில் ஏற்படக்கூடிய காரியம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், பெண்களுக்குத்தான் கற்பு; ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்கின்ற தத்துவமே தனி உடைமைத் தத்துவத்தைப் பொறுத்தது."

- ஈ.வெ.இரா.

## 9.1.1. தமிழ் இலக்கியத்தில் கற்பு

கற்பு என்னும் தமிழ்ச் சொல்லுக்கான விளக்கம் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றில் உள்ளவாறு அறியப்படுதல் நல்லது.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே

என்பது தொல்காப்பியம்.

இதன் பொருள், கிழத்தியாக - துணைவியாக ஒருத்தியைக் கொள்ளுவதற்கு உரிய கிழவன், பெண் கொடுக்க உரிய மரபினரிடத்துப் பெண் கேட்டு, அவர்களால் கொடுக்கப்பட்டுத் திருமண நிகழ்ச்சியை நடத்திக் கொள்ளுவதே கற்பு ஆகும் என்பதாகும். இது கற்பொழுக்கம் என்கிற திருமண வகையை மட்டுமே குறித்ததாகும். மேலும் இது 'களவுமுறைத் திருமணம்', என்பதிலிருந்து வேறுபட்டதாகும்.

இவ்வாறு இச்சொல் அமைந்துள்ள தன்மையைக் கொண்டு கற்பு என்னும் சொல் திருமணம் ஆன ஒரு பெண் என்பதைக் குறிப்பதற்கே பயன்படுகிறது என்பது தெளிவாகிறது. அப்பெண்ணின் ஒழுக்கம் பற்றி இது குறிப்பது யாது? உடன்போக்குச் சென்று பெற்றோரால் மணம் முடிக்கப்பட்ட பெண் என்பதை மட்டுமே இது உணர்த்தும்.



இதில் உடலுறவு பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை.

காலத்தால் தொல்காப்பியத்திற்குப் பிந்தியது திருக்குறள். ஆகவே திருக்குறளில்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என வரும் குறளில், பெண் என்னும் சொல்லும் (குறள் 54) கற்பு என்னும் சொல்லும் பயிலப்படுகின்றன. "கற்பு என்னும் திண்மை" உடையவளாக ஒரு பெண் இருப்பாளானால் அவளுக்கு அப்படிப்பட்ட பெண்ணைவிட பெருமை உடையது யாதுமே இல்லை என்று இக்குறளில் குறிப்பிடப்படுகிறது.

இங்குக் கையாளப்பட்டுள்ள கற்பு என்னும் சொல் பெண்ணின் உடலுறவை - ஒழுக்கத்தைக் குறிப்பதேயாகும். அந்த ஒழுக்கம் எத்தன்மையது என்பதைத் தமிழில் இலக்கியங்கள் கூறுவதைக் கொண்டு, "பிறர் நெஞ்சில் இடம் பெறாதவளாக இருத்தல் - தற்கொண்டான் பேணுதல்" என்றே நாம் அறிய முடியும்.

இத்தகையதொரு நெறி, ஓரிடத்தில் மட்டுமே, திருக்குறளில் ஆணுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு" (குறள் 974)

என்பது திருக்குறள். ஒருவனோடே இருந்து வாழும் மகளிர் பெருமைக்கு உரியவர். அதேபோல் தன்னைத்தான் தற்காத்துக் கொண்டு ஆடவனும் நடந்தால் அவனுக்கும் பெருமை உண்டு என்பதே இதன் பொருளாகும்.

"கற்பு என்னும் திண்மை" ஓர் ஒழுக்கமாகப் பெண்ணுக்கு வரையறுக்கப்பட்டிருப்பது போல, ஆணுக்கும் "தன்னைத்தான் கொண்டொழுகுதல்" என்கிற ஓர் ஒழுக்கம் திருக்குறளில் வரையறுக்கப்பட்டிருப்பதை இவ்விரண்டு குறட்பாக்களைக் கொண்டு நாம் அறியலாம். அப்படி ஒழுகுவதால் பெண் "பெருந்தக்க கற்பு" உள்ளவளாகவும், ஆண் "பெருமை உடையவனாகவும்" திகழ முடியும் என்பது இதனால் பெறப்படும். இவை இவ்வாறு இருக்க.

இன்று கற்பு என்பது பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்தையும், அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் பற்றி ஈ.வெ.இரா. கூறுவது எல்லோருடைய ஆய்வுக்கும் உரியது.

ஏன் அப்படிச் செய்யத் தொடங்கினர் என்பதற்குத் தொல்காப்பியரால் சொல்லப்படும் காரணம் பின்வருமாறு:

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

'ஆண் பெண்களிடையே களவொழுக்கம் நிறைந்துவிட்டதை மறைத்துக்கொண்டு நடக்கத் தலைப்பட்டதன் விளைவாக, அதனைத் தடுப்பதற்கு ஒரு வழியாகத் தன்னுடைய மூத்தவர்களான (ஐயர்) தாய் தந்தையரால் செய்யப்பட்ட ஏற்பாடே திருமண முறை என்பதே இதற்குத் தரப்படும் பொருளாகும்.

இங்கு ஐயர் என்பது தன்னை விட மூத்தோர்களான - உயர்ந்தவர்களான பெற்றோர்களையும் குறிக்கும் என்றே எல்லோராலும் - சொல்லப்படுகின்றது. இது பொருந்தாது என்பது நம் கருத்தாகும்.

ஏனெனில், தொல்காப்பியத்தில் அந்தணர், ஐயர், பார்ப்பனர் என்ற மூன்று சொற்களும் பயிலப்படுகின்றன.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

என்பது தொல்காப்பியம்.

அடுத்து,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர்பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"

என்பதும் தொல்காப்பியம் ஆகும்.

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் புறத்திணை இயல் - 16)

தமிழறிஞர்களால் உறுதி செய்யப்பட்டபடி, திருவள்ளுவர் தோன்றிய காலம் கி.மு. 31 ஆகும். திருக்குறள் காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் முன்னரே தொல்காப்பியம் தோன்றியிருத்தல் வேண்டும். எனவே தொல்காப்பியர் காலம் கி.மு. மூன்றாம் அல்லது நான்காம் நூற்றாண்டு என நாம் கொள்ளலாம்.

தொல்காப்பியர் வடவர் தேயத்து மணமுறைகளைப் பற்றி அறிந்திருந்தார் என்பதை, 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்...' எனவரும் அவருடைய நூற்பா வழியாக அறிகிறோம். இதுகொண்டு அப்போதே ஆரியப் பார்ப்பனர் தமிழர் வாழ்வில் இடம் பெற்றிருந்தனர் என்றே நாம் கருதுகிறோம்.



தொல்காப்பியர் காலத்தில் திருமண நிகழ்ச்சியில் பார்ப்பன புரோகிதர் இடம்பெறவில்லை என்றே நாம் வைத்துக்கொண்டாலும், அதிலிருந்து 700 ஆண்டுகட்குப் பிற்பட்ட கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழரின் வீட்டுத் திருமணத்தில் - சிலப்பதிகாரத்தில் கண்டபடி, பார்ப்பனர் புரோகிதராக இருந்து தீ வளர்க்கப் பட்டதையும், தீயைச் சுற்றி மணமக்கள் வலம் வந்ததையும் மறுப்பார் எவரும் இலர்.

இதனை,

"சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்பென்னை"

(சிலப்பதிகாரம் : மங்கல வாழ்த்து)

என்னும் சிலப்பதிகார அடிகளின் மூலம் அறியலாம். இதில் பயிலப்படும் 'பார்ப்பான்' என்னும் சொல் தீ வளர்க்கும் ஆரியப் பார்ப்பானையே குறிக்கும்.

இங்கு ஐயர், அந்தணர், பார்ப்பனர், மறை, பார்ப்பனப் பக்கம் முதலான சொற்கள் தொல்காப்பியத்தில் பயிலப்படுவதைப் பற்றி நாம் நடுநிலையில் நின்று ஆய்வு செய்தல் வேண்டும்.

அடுத்து

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே"

என்பதும் தொல்காப்பியம்.

இதன் பொருள், மேல் சாதியினரான - உயர்வருணத்தாரான - பிராமணன், சத்திரியன், வைசியன் என்ற மூன்று வகுப்பாரிடையேயும் இடம் பெற்றிருந்த கரணங்கள் எனும் சடங்கு முறைகள், காலப்போக்கில், கீழோர்க்கும் உரியவை ஆயின என்று தொல்காப்பியத்தில் சொல்லப்படுவதை நாம் அறிதல் வேண்டும். இவ்விடத்து - பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் வடசொற்களை அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் எனத் தமிழில் எழுதிவிடுவதால் 'பார்ப்பான்' - 'தமிழ் அந்தணன்' ஆகிவிட முடியாது. இவற்றை மட்டும் இடைச்செருகல் என அறிஞர்கள் கூறுவதும் பொருந்தாது.

தொல்காப்பியர் காலத்துக்கும், இளங்கோவடிகள் காலத்துக்கும் இடைப்பட்ட ஏழு நூற்றாண்டு காலத்தில் மேல் மூன்று வகுப்பாரிடத்தும் இருந்த பார்ப்பனப் புரோகிதத் திருமண முறை கீழ் வகுப்பினரால் ஏற்றுச் செயல்படுத்தப்பட்டது என்றும், அவ்வாறு கொள்வதற்குச் சிலப்பதிகாரத்தில் காணப்படும் கோவலன் - கண்ணகி

மேலும், தாய், உடன்பிறந்தவர்கள், மகள், தந்தை, உடன் பிறந்தவள், மகன் என்கிற உறவுமுறைகளைக் கடந்து உடல் சேர்க்கை நிகழ்ந்தது. அதாவது ஆண்-பெண் சேர்க்கை என்பது ஒரு கட்டுப்பாடு அல்லது வரைமுறைக்கு உட்பட்டு இருக்கவில்லை; வரைமுறையற்றுக் கண்டபடி உடலுறவு கொள்வதாகவே இருந்தது. இந்நிலை பல ஆயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கக்கூடும்.

## வெவ்வேறு திருமண முறைகள்

ஏறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமக்கு உரிய விலங்குகளை வளர்க்கவும், தமக்குத் தேவைப்படும் தானியங்களைப் பயிர் செய்து கொள்ளவும் வேண்டி ஆணும் பெண்ணும் சேர்ந்த ஒரு குடும்பமாக மனிதர்கள் தங்கி வாழவும் தொடங்கினர்.

அப்போது முதற்கொண்டு குடும்பத்துக்கு உரிய தலைவன், தலைவி, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் என்கிற திட்டவட்டமான குடும்ப அமைப்பு ஏற்படலாயிற்று.

அப்படிப்பட்ட குடும்பத்தில் தனக்கு உரிமையான ஆண், தனக்கு உரிமையான பெண் என்கிற உணர்வு அரும்பலாயிற்று. ஆயினும் அப்படிப்பட்ட பலப்பல குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடிப் பழகும்போது, ஒரு குடும்பத்தைச் சார்ந்த பெண்ணுக்கோ, ஆணுக்கோ இன்னொரு குடும்பத்தைச் சார்ந்த பெண்ணோடும், ஆணோடும், அறிமுகமும் உடலுறவும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட உடலுறவு இரு வீட்டாருக்கும் தெரியாமல் நீடித்த தன்மையே களவு ஒழுக்கம் என்று பழங்காலத் தமிழிலக்கியங்களில் கூறப்படுவதாகும். உலகின் பல பகுதிகளிலும் இது இதே தன்மையில்தான் நீடித்தது.

இப்படிப்பட்ட நிலைமை இருந்தபோதுதான், திருமண முறை உருவாயிற்று. திருமண முறை என்பது கி.மு. 3000 இலேயே அரும்பிவிட்டது. 3000 ஆண்டுகட்கு முந்தைய மொகஞ்சதாரோ, அரப்பா நகர நாகரிக அமைப்பில் வீடுகள், தெருக்கள், கழிவுநீர்க் கால்வாய்கள், கிணறுகள், குளிக்குமிடங்கள், தானியச் சேமிப்புக் குதிர்கள், மாடுகள், மாட்டு வண்டிகள் முதலியவை இருந்தன என்பதைக் கொண்டு நாம் இதை அறியலாம். திருமண முறை என்பது ஆரியர்களிடையேயும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியதாக நாம் அறிய முடிகின்றது. இதற்கான சான்று ரிக் வேதத்தில் உள்ளது.

ஆரிய முறைத் திருமணம் ஒரு சமூக, மதக் கடமையாக அப்போதே கருதப்பட்டது. ஈரானிய, பாரசீகச் சமூகங்களிலும் இப்படிப்பட்ட



திருமண முறை அக்காலத்தில் உருவாயிற்று. ஆனால் அது மதத்தோடு அது பிணைக்கப்படவில்லை.

ஆண்களும், பெண்களும் கள்ளொழுக்கத்துக்கு ஆளாவதைத் தடுப்பது திருமண ஏற்பாட்டின் முதன்மையான நோக்கமாக இருந்தது. மேலும், சமூகத்துக்கு இவர்களின் உறவுத் தொடக்கத்தை அறிவிப்பதாகவும் அது இருந்தது. தங்கள் இனத்தைப் பெருக்க வேண்டிப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும் திருமணத்தின் இன்னொரு நோக்கமாக இருந்தது. மதச் சடங்குகளைத் தொடர்ந்து செய்வதற்கெனப் பிறங்கடைகள் (வாரிசுகள்) தேவை என்பதும் ஒரு காரணமாக இருந்தது.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் ஆண்கள் துறவு நிலையை மேற்கொள்ளும் பழக்கம் அரும்பியது. துறவியர்களும் மற்றவர்களும் குடும்பமாக வாழ்பவர்களின் உதவியை நாடிச் செல்லும் பழக்கம் ஏற்படலாயிற்று. ஆனால் சமூகத்தில் திருமணம் செய்துகொண்டவர்கள் மரியாதைக்குரியவர்களாகவும், திருமணம் செய்து கொள்ளாதவர்கள் மரியாதை குறைந்தவர்களாகவும் கருதப்பட்டனர். நிற்க.

ஆரியர்களிடையே நிலவி வந்த எண்வகை மணமுறையில் 'காந்தர்வமுறை' என்பது ஆணும் பெண்ணும் தாமே விரும்பிச் செய்து கொள்ளுகிற மணமுறையாகும். இது அதே சம காலத்தில் தமிழர்களிடையேயும் நடந்திருக்க வாய்ப்புண்டு. இதனை, "கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே, புணர்ந்து உடன் போகிய காலையான" எனும் தொல்காப்பிய நூற்பா மூலம் உறுதியாக அறியலாம். இதுவே களவு ஒழுக்கம் அல்லது களவு மணம் ஆகும். இது குறித்துத் தொல்காப்பியம் மேலும் கூறுவதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும்.

அதாவது,

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"

எனச் சொல்லப்படுவது இந்தக் காந்தர்வத் திருமண முறையைக் குறிப்பதேயாகும்.

இது காதல் மணம் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தக் காதல் மணமுறைக்கு விதிக்கப்பட்ட தடை என்பதுதான் பெண்ணின் உரிமை பறிபோன முதலாவது இடமாகும். இதுதான் பழங்காலப் பொதுமைச் சமுதாய (Primitive Commune) அமைப்பு உடைந்து தனிக்குடும்பம், தனிச் சொத்து தோன்றிய காலகட்டமாகும்.

என்று அழைக்கப்பட மாட்டாது; 'இவர் இன்னாருடைய புருஷர்' என்றே அழைக்கப்பட வேண்டும்." (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக் 176-77)

மேலும், தனி உடைமைச் சமுதாயம் நீடிக்கிறவரையில் பெண்கள் பெட்டிப் பாம்புகளாகத்தான் அடக்கி வைக்கப்பட்டிருப்பார்கள் ஏனெனில், ஆட்சியில் செல்வாக்குள்ள மேல்சாதிக்காரர்களால் திணிக்கப்பட்ட இந்த ஏற்பாடு தெக்குவிட அவர்கள் விடமாட்டார்கள் என்பதையும் பின்வருமாறு அவர் கோடிட்டுக் காட்டினார்.

"எப்போது புருடன் – பெண்டாட்டி, அதற்கு ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால் தனக்கெனச் சொத்து, உடைமை தோன்றிய காலத்தில்தான்."

முதலில் மனிதன் மற்ற ஜீவன்களைப்போல் எதையோ அடித்துத் தின்றுவிட்டு, அவன் போக்கில் திரிந்து கொண்டிருந்தான். அப்போது சொத்து என்ற பேச்சுக்கு இடமில்லை. பின்னர் அவன் பயிர் செய்யக் கற்றுக்கொண்டு இது இன்னாருக்குச் சொந்தமான நிலம் - இது இன்னார் சொத்து என்று ஏற்படுத்த தனி உடைமை ஏற்பட்ட காலத்தில்தான், புருடன்-பெண்டாட்டி என்பதற்கும் இடம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தனி உடைமை ஏற்பட்ட பிறகு சொத்துச் சேர்க்கிறான்; தான் உயிருடன் இருக்கிறவரையில் அது அவனுடையதாக இருக்கிறது.

அவன் இறந்தபிறகு அந்தச் சொத்து யாருக்கோ பயன்படப் போகிறது; யாருக்கோ பயன்படுவதைவிட, தனக்குப் பிறந்த குழந்தைக்கே பயன்பட வேண்டும் என்று மனிதன் சிந்தித்து - சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஓர் ஏற்பாடாகத்தான், புருடன் - பெண்டாட்டி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும். சொத்தில் இருந்துதான் இந்த முறை பிறந்திருக்க வேண்டும்.

இன்னமும்கூட நீங்கள் பார்க்கலாம்; பணக்காரர்களாக அல்லது உயர்சாதி என்று கருதிக் கொண்டிருப்பவர்களிடம்தான் - பெண் வெளியில் போகக்கூடாது; அக்கம் பக்கம் பார்க்கக்கூடாது என இந்தக் காரியத்தில் அதிகக் கவலை கொண்டு, கட்டுப்பாடு உள்ளது.

சாதாரணப் பாட்டாளி மக்கள், ஏழைகள், அன்றாடக் கூலி மக்களாக வாழ்பவர்களிடத்தில் இவ்வளவு கடுமையான கட்டுப்பாட்டைக் காண முடியவில்லை."

(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக் 198-99)

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆணுக்கு உள்ளது போலவே பெண்ணுக்குச் சொத்தில் சமபங்கு கொடுப்பதற்கான ஒரு



சட்ட முன்வரைவு இந்திய மத்திய சட்ட சபையில் 1936 இல் முன் வைக்கப்பட்டது. நிலவுடைமைக்காரர்களும், பார்ப்பனர்களும் பார்ப்பனப் பத்திரிகைக்காரர்களும் மக்களிடம் இதற்கு எதிரான கருத்துகளை உருவாக்கியதால் அவ்வரைவு சட்டமாக நிறைவேற்றப்பட முடியவில்லை. அடுத்த பத்து ஆண்டுகளில் அதேபோல் சம பங்கு கொடுப்பதற்கேற்ற சட்ட முன்வரைவை பி.என்.ராவ் குழுவினர் முன் வைத்தனர். அதுவும் சட்டமாக நிறைவேற்றப்படவில்லை.

1947 இல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன் மொழிந்த இந்துச் சட்டத் திருத்த முன் வரைவு 1956 இல் முன்மொழியப்பட்டு, 17-6-1956 இல் நிறைவேற்றப்பட்டது. கடைசியாக நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்திலும் பெண்களுக்குச் சொத்துரிமையில் சமமான அளவில் பங்கு அளிக்க வழிசெய்யப்படவில்லை.

தமிழ்நாட்டு அரசினரால் 1989 இல் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு கொடுப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி இதில் பெரிதும் அக்கறை எடுத்துக்கொண்டார் என்பது அறியத்தக்கது.

இந்தியாவிலுள்ள நிலங்கள் ஏற்கெனவே சிறு சிறு துண்டுகளாக உள்ளன. பெண்களுக்குச் சமபங்கு என்கிற பேரால் மேலும் நிலங்களைத் துண்டாடுவது வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கும் என்றும், பொருளாதாரத்தில் பெரிய சரிவை உண்டாக்கும் என்றும் ஒரு சாரார் இதற்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர். மணவாழ்க்கைக்குப் பின்னர்த் தந்தையின் ஊரைவிட்டுச் சென்றுவிடுவதால், மகள் நேரிடையான வேளாண்மையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பில்லை என்பதையும் அவர்கள் முன் வைக்கின்றனர்.

கணவன் மறைவுக்குப் பின், கணவன் வழியாகச் சொத்து வருமாதலின் தந்தை சொத்தில் மகளுக்குப் பங்கு தேவையில்லை என்றும் கூறி எதிர்வழக்காடுவோரும் உள்ளனர்.

இவற்றையெல்லாம் மீறிச் சொத்து உட்பட்ட அனைத்துத் துறைகளிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமபங்கும், சம அனுபவிப்பு உரிமையும் பெறுவதென்பது பொதுவுடைமை அமைப்பிலேயே முடியும் என்பது பெரியாரின் முடிவான கருத்தாகும்.

இந்தச் சாஸ்திரத்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள், 'சாஸ்திரத்தில் பருவமடைந்த பிறகு கலியாணம் செய்வதற்கு இடமில்லை' என்று சொல்ல வருவார்களானால் - அதிலும் அதற்காக அவர்கள் சத்தியாக்கிரகம் செய்வேனென்று சொல்வார்களானால், அவர்கள் நம்மை எவ்வளவு முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்துப்பாருங்கள். உங்களுக்கு ஒரு காரியம் சரியென்று பட்டால்-அது சாஸ்திர சம்மதமா, விரோதமா என்று எதிர்பார்ப்பது அறியாமையும் அடிமைத்தனமுமாகும். இந்த உலகத்திற்கு அவசியமான காரியம் - மேல் லோகத்தில் என்ன பயனைத் தரும் என்பது மற்றொரு அடிமைத்தனமாகும்.

**எந்தக் காலத்திலோ, எங்கிருந்தோ, யாராலோ, எதற்காகவோ, யாருக்கோ எழுதிய ஒரு புத்தகத்தை – இந்தக் காலத்திற்கு, இந்த இடத்திற்கு நமது நன்மைக்காக, நமது நன்மையில் கவலை கொண்டவர்களைக் எழுதப்பட்டதென்றும், அதன்படி நடந்து தீர வேண்டும் என்றும் கருதுகின்றவன் மனிதனல்லன் என்பதுதான் எனது மாற்ற முடியாத உறுதியான அபிப்பிராயம் ஆகும்."**

('குடிஅரசு' 27.10.1929; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 141)

## 9.3.2. இளம்வயது மணவிலக்குச் சட்டம்

மேலும் ஈ.வெ.இரா. எழுதுகிறார்:

"மக்கள் இளம் வயதில் - அதாவது தக்க வயதும், உணர்ச்சியும் இல்லாத காலத்தில்-விவாகம் செய்யப்பட்டு வருவதால், மக்கள் சமூக வளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்கின்ற உண்மையை நமது வாழ்வில் தினமும், அனுபவத்தில் கண்டு வருவதோடு, அவற்றைத் தடுக்க வேண்டுமென்பதாகவும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

இதைப்பற்றிப் பல சமூக மாநாடுகளிலும், பேசித் தீர்மானங்களும் செய்து வருகின்றோம். ஆனால், அதை அனுசரித்து அது அமலில் வரத்தக்க ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரம்பித்தால், உடனே அங்கு மதம் வந்து குறுக்கே விழுந்து, அம் முயற்சிகளை அழிப்பது வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றதும் நாம் அறிவோம். இதன் காரணமாகவே, பெரிதும் நாம் மனித இயற்கைக்கு விரோதமான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண்மூடிப் போகவேண்டுமென்று முயற்சித்து வருகின்றோம். இம்முயற்சிக்கு யார் எதிரிடையாய் இருந்த போதிலும் நாம் ஒரு சிறிதும் இலட்சியம் செய்யாமல்



இடையூறான மதங்களையும் அதற்கு ஆதாரமான சாமிகளையும் கூட ஒழிக்க வேண்டும் என்றே சொல்லுகின்றோம்.

சமீப காலத்தில் சென்னைச் சட்டசபையில் இது விஷயமாய்ச் சட்டம் செய்வதைப் பற்றி வாதம் நடைபெற்ற சமயத்தில், பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சார்ந்த மாஜி மந்திரி சர் ஏ.பி. பாத்ரோ அவர்கள் சற்று மாறுதலாய்ப் பேசியதற்காக அவரை, பார்ப்பனரல்லாதார் கட்சி அங்கத்தினத்தை இராஜிநாமா கொடுத்துவிட்டுப் பார்ப்பனர் கட்சிக்குப் போய்விட வேண்டும் என்று கூட எழுதியிருந்தோம்.

இந்நிலையில் சென்ற வாரம் இந்தியச் சட்டசபையில் இம் மசோதா விவாதத்திற்கு வந்தபோது தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பெரிதும் இம் மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசியிருப்பதையும், பலர் தனி விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும், அதில் சில முக்கிய அங்கத்தவர்களும் கையொப்பம் இட்டிருப்பதாகவும் தெரிய வருவதுடன் பல சங்கராச்சாரிகளும், சாஸ்திரிகளும் 'இராம ராஜ்யம்' நடத்தும் மகாராஜாக்களும் இம்மசோதாவிற்கு விரோதமாய் அரசப் பிரதிநிதியிடம் தூது போனதாகவும் தெரிய வருகின்றது.

இது விஷயமாய் இந்தியச் சட்டசபையில் நடந்த முழு விபரத்தையும் எழுத நமக்குப்போதிய இடமில்லாவிட்டாலும், அம்மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசிய தமிழ்நாட்டுப் பிரதிநிதியும், இந்து மத வருணாசிரமப் பிரதிநிதியும் ஆகிய எம்.கே. ஆச்சாரியார் அவர்களின் போக்கைச் சற்றுக் கவனிப்போம்.

திரு. ஆச்சாரியார் அவர்கள் இச்சட்டத்தை எதிர்த்துப் பேசுகையில், 'பாலிய விவாகமில்லாவிட்டால் உண்மையான கற்பு என்பது சாத்தியமில்லை' என்றும், பெண்களின் வாழ்க்கை நாசமடைந்துவிடும் என்றும், குடும்ப வாழ்க்கை துக்கமயமாகிச் சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும் என்றும், புருஷர்களுக்குச் சிறைத்தண்டனை அளித்துவிடுவதால் பெண்கள் நடத்தையும் அதிகக் கேவலமாக மாறிவிடும் என்றும், பாலிய விவாகம் இருந்தாலொழிய வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்' என்றும் பேசி இருக்கின்றதாகத் தெரியவருகிறது. இவை 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு' பத்திரிக்கைகளில் காணப்படுகின்றதுடன், 'சுதேசமித்திரன்' நிருபரும், திரு. ஆச்சாரியாரை ஆதரித்தும் புகழ்ந்தும் எழுதி இருக்கின்றார்.

பாலிய விவாகமில்லாவிட்டால் பெண்கள் கற்புக் கெட்டுப்போகும் என்று சொல்லுவதும், வாழ்க்கையில் துக்கம் ஏற்படும் என்று சொல்லுவதும் எவ்வளவு மனந்துணிந்து சொன்ன அயோக்கியத்

## 9.1 பயிற்சி வினாக்கள்

1. தமிழிலக்கியத்தில் கற்பொழுக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளதைத் தொகுத்துக் கூறுக.
2. 'கற்பு' என்பது பற்றி ஈ.வெ.இரா. புரட்சியாகச் சிந்தித்துள்ளார் என்பதை நிறுவுக.
3. 'கற்பு' என்ற சொல் பற்றி ஈ.வெ.இரா. கூறும் விளக்கம் பற்றி எழுதுக.

# 9.2. கைம்பெண் மறுமணம்

### 9.2.1. விதவை மறுமணம்

கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் செய்து கொள்ளுவது ஏற்புடையது அன்று என்ற கொள்கை அதர்வண வேத காலம் தொட்டு இங்கே வளர்க்கப்பட்டது. (அதர்வண வேதம் 9, 5,279)

அதர்வண வேதத்தை அடுத்து நாரதர், பராசரர், இயமா ஆகியோர் இக்கொள்கையைத் தூக்கிப் பிடித்தனர். கணவனை இழந்த பெண் அவனுடைய உடன்பிறந்த ஆணைக்கூடிப் பிள்ளை பெறுக் கொள்ளலாம் என்பதும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டபடி, கி.பி. 600 வரை நீடித்தது.

கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளுவது இழிவானது என்கிற கோட்பாடு கி.மு. 300 முதல் கி.பி. 200 வரை செல்வாக்கோடு வளர்த்தெடுக்கப்பட்டது. கைம்பெண்களுக்கு மொட்டை அடித்தல், சமயச் சடங்குகளில் பங்கு பெறுவதிலிருந்து விலக்கி வைத்தல் முதலான ஒதுக்கல் பழக்கங்கள் கி.பி. 500-க்குப் பின் அவர்கள் பேரில் சுமத்தப்பட்டன. குழந்தைப் பருவத்தில் விதவையானவர்களும் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது கி.பி. 1000 முதல் நடப்புக்கு வந்தது.

**இவையெல்லாம் விஷ்ணு, மநு, நாரத ஸ்மிருதிகளின்படியே பின்பற்றப்பட்டன. தேவண்ண பட்டர் (கி.பி. 1150) 'கலியுகத்தில் கைம்பெண் மணம் சாஸ்திரத்திற்கு எதிரானது' என்று கூறினார். எனவே, மேல்சாதிக்காரர்களிடையே கைம்பெண் மறுமணம் என்பது கி.பி. 1100-க்குப் பிறகு பெரும்பாலும் நடைபெறாமலேயே போய்விட்டது.**

**ஆனால், கீழ்ச்சாதி மற்றும் உழைப்பாளி வகுப்பினரிடையே அன்றும் இன்றும் கைம்பெண் மறுமணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.**

("THE POSITION OF WOMEN IN HINDU CIVILISATION"
By Dr. S. ALTAKER, 1983, p. 135, 195)

இப்பெண்மணி மாஸ்கோவில் உள்ள இந்தியாவைப் பற்றிய ஆய்வு மையத்தின் துணைத் தலைவராக உள்ளவர் ஆவார்.
(Tatiana Shaumian, Deputy Head, Centre for Indian Studies in Moscow)

உலக மக்கள் கூட்டத்தில் பாதிப்பேர் பெண்கள். இவர்கள் வீடு, சமுதாயம், அரசியல், பொருளியல், சமய இயல் என்கிற எல்லாத் துறைகளிலும் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கிறவரையில் எந்த மக்கள் கூட்டத்துக்கும் எப்போதும் விடுதலை வராது என்பதைத் தமக்கே உரிய வீறுடன் உறுதிப்பட உரைத்தார் புரட்சிக் கவிஞர் கனக. சுப்புரத்தினம்.

“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
..........”

எனக் கூறிக் குமைகிறார் கவிஞர்.

ஆணும் பெண்ணும் சேருவது உயிரினங்களுக்கே உள்ள இயற்கைத் தன்மை என்பதை அறிந்திருந்த ஈ.வெ.இரா. அந்தச் சேர்க்கை ஒரு கூட்டு வணிகம் போலவும், ஒப்புரவு - ஒத்த உரிமை உள்ளதாகவும் இருக்கவேண்டும் என்றே விரும்பினார். இதுபற்றிக் கூறுகிறார்:

“அது போலவேதான், வாழ்க்கை நடத்துவதும் வியாபாரம் நடத்துவது போன்ற செயல்தான். வியாபாரத்திற்கு முதலும் உழைப்பும் எப்படித் தேவையோ அது போன்று வாழ்க்கைக்கு ஓர் ஆணும், ஒரு பெண்ணும் அவர்களது இரண்டறக் கலந்த ஒப்புரவும் தேவையாய் இருக்கிறது.

இரு ஆண்கள் சேர்ந்தோ, இரு பெண்கள் சேர்ந்தோ ஒருபோதும் வாழ்க்கை - குடும்ப வாழ்க்கை நடத்த முடியாது; இயற்கையும் அதற்கு இடம் கொடாது. இயற்கையாக ஓர் ஆணும் பெண்ணும் சேருவது ஜீவசுபாவத்தை ஒட்டியதுதான். எந்த ஜீவனும் தன் இனப்பெருக்கத்துக்காக ஆணும் பெண்ணுமாக இயற்கையால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அவை ஒன்றோடொன்று ஒட்டித்தான் தீரும்.” எனப் பெரியார் குறிப்பிட்டுள்ளதிலிருந்து நாம் உணருவது என்ன?

(பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 213)

ஒப்பந்தம் என்னும் அடிப்படையில் கூட்டு வாழ்க்கையை மேற்கொள்ளும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒருவருக்கொருவர் ஒப்புரவு - சரிநிகர் - ஒத்த உரிமை இருக்கவேண்டும் என்பதே; ஒப்புரவு இல்லாத கூட்டு வாழ்க்கை - கட்டாயக் குடும்ப வாழ்க்கை கூடாது என்பதே, பெரியாரின் கருத்து ஆகும்.



இந்திய மண்ணில் அனைவர்க்கும் முன்னோடியாக, பெண்ணுரிமையைப் பேணும் அரிய சுய சிந்தனைக் கருத்தொன்றினை 1970 மார்ச்சில் ஈ.வெ.இரா. வழங்கினார். அது யாது?

‘அரசியல் உத்தியோகங்களிலும் பதவிகளிலும் பெண்களுக்கு 50 விழுக்காடு, ஆண்களுக்கு 50 விழுக்காடு என ஒதுக்கப்படுவது - பெண்களுக்குச் சம உரிமை அளிப்பதாகவும், பெண்ணடிமையை ஒழிக்க உதவுவதாகவும் அமையும்’ என்பதே அக்கருத்தாகும்.

அவர்தம் சுயசிந்தனையில் விளைந்த இக்கருத்தினை, இந்திய அரசின் துணை அமைச்சராக இருந்த டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்களிடம் 1970 மார்ச்சில் நேர்காணலில் முதன்முதலாக அறிவித்தார். தமிழ்நாட்டைச் சார்ந்தவரும், உலகப் புகழ் பெற்ற மக்கள்தொகைப் பெருக்கக்கட்டுப்பாடு பற்றிய ஆய்வு அறிஞரும் ஆன டாக்டர் எஸ். சந்திரசேகர் வியப்படைந்து, ‘இந்த யோசனை நன்றாக இருக்கிறது. ‘ஒரிஜினல் சஜஷன்’ என்று பெரியாரிடமே கூறினார்.

இதோ அக்கூற்று:

**அமைச்சர் :** அப்புறம் முன்னே என்ன பண்ணினோம்-ஒரு 4 வருஷத்துக்கு முன்னே ஒரு தம்பதிகளுக்கு 2,3,4 குழந்தை பெத்துக்கலாம்; அவங்களுக்குப் பணமிருந்தால், சவுகரியமிருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி கொடுத்துக் காப்பாற்ற முடியுமானா, 5,6 குழந்தைக்கூடப் பெத்துக்கலாம்னு ஒரு தடவை சொன்னோம்.

அப்புறம் சொன்னோம்; அதெல்லாம் முடியாது. ரெண்டு குழந்தைங்க, இல்லேன்னா மூணு. இப்ப நான் கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தா அதுவும் கொஞ்சம் சாஸ்தியா போச்சு.

அப்புறம் நாங்க சொன்னோம் - ஒரு ரெண்டு குழந்தை போதும்னு சொல்றோம். அதிலே என்ன கஷ்டம்னா, இப்போது ஒரு ஆண்-ஒரு பெண் குழந்தை பொறந்துட்டுதானா கஷ்டமில்லே. ரெண்டும் பெண்ணா போயிட்டதுன்னா இன்னும் ஒண்ணுக்கு ‘டிரை’(Try) பண்றாங்க ஆணு, ஆண் குழந்தை வேணும்னு. அதுக்கு எப்படி அவங்களை ‘எஜுகேட்’ பண்றதுன்னு எனக்குத் தெரியலே. பெண் குழந்தை பொறந்தாலும் அதோடு நிறுத்திக்கலாம், ஒண்ணும் கஷ்டமில்லே. பெண்ணும் ஆணும் ஒண்ணுன்னு சொல்றதுக்கு நம்மாலே முடியலே; நான் சொல்றது என்னன்னா, 2 குழந்தை இருந்தா போதும். 2 ஆண் குழந்தை இருந்தாலும் நிறுத்திடணும்னு சொல்லணும். அதை எப்படிச் சொல்றது மக்களுக்கு?

வாழாமலிருந்தாலுங்கூட, புருஷனைச் சாப்பாட்டிற்கு மாத்திரம் கேட்கலாமேயொழிய இன்பத்திற்கோ இச்சையைத் தீர்ப்பதற்கோ அவனைக் கட்டுப்படுத்த மனைவிக்கு உரிமையில்லையென்றும் கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன.

இந்நிலை சட்டத்தாலும், மதத்தாலும் மாத்திரம் ஏற்பட்டதென்று சொல்வதற்கில்லாமல், பெண் சமூகம் ஒப்புக்கொண்டு, இந்நிலைக்கு உதவி புரிந்துவருவதனால், இது உரம்பெற்று வருகிறதென்றே சொல்ல வேண்டும். அதிக வருடப் பழக்கவழக்கங்களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தாங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக்கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும் ஒடுங்கவும் விலகவும் முந்துகின்றார்களோ, அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண் மக்களின் சொத்துக்களென்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களென்றும், அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்களென்றும் நினைத்துக்கொண்டு, சுதந்தரத்தில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையாகப் பெண்கள்விடுதலை வேண்டுமானால் 'ஒரு பிறப்புக்கொரு நீதி' வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு முறையொழிந்து, 'இரு பிறப்பிற்கும் சமமான – சுயேச்சைக் கற்பு முறை' ஏற்பட வேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்ப்பந்தக் கலியாணங்கள் ஒழிய வேண்டும்.

**கற்புக்காகப் புருஷனின் மிருகச்செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும்.**

**கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை, காதலை மறைத்துக்கொண்டு – காதலும், அன்புமில்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும்.**

எனவே, இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக் கற்பை - இயற்கைக் கற்பை - சுதந்தரக் கற்பைக் காணலாமேயொழிய, நிர்ப்பந்தங்களாலும் - ஒரு பிறப்புக்கொரு நீதியாலும் - வலிமை கொண்டவன் வலிமையற்றவனுக்கு எழுதி வைத்த தர்மத்தாலும் ஒருகாலும் காண முடியாது என்பதுடன், அடிமைக் கற்பையும் நிர்ப்பந்தக் கற்பையுந்தான் காணலாம். அன்றியும், இம்மாதிரியான கொடுமையைவிட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்று இருப்பதாக என்னால் சொல்ல முடியாது. (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 115)

பெண்கள் முக்காடு போடுவது, முகத்தை மூடிக்கொள்ளுவது அடிமைச் சின்னம் என்பதையும், ஓர் ஆடவன் பல பெண்களை



மணக்கலாம் என்பது பெண்ணுரிமைப் பறிப்பாகும் என்பதையும் ஈ.வெ.இரா. மேலே கண்டவாறு விளக்கியுள்ளார். மேலும், கற்பு என்பது பெண்களின்பேரில் மட்டும் சுமத்தப்பட்டிருப்பது பெண்களை அடக்கி ஆள ஒரு கருவி என்பதும் அவருடைய கருத்தாகும்.

தமிழராலும், ஆரியராலும் கொள்ளப்பட்ட எண்ணங்களை ஆய்வு செய்வதோடு நில்லாமல், கிறித்தவர்களும், இஸ்லாமியர்களும், சீக்கியர்களும், இந்தியாவில் இமாசலப் பிரதேசம், மலையாளம் முதலிய பகுதிகளிலும் வாழும் மக்களும்; திபெத் மற்றும் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, உரோமாபுரி, இங்கிலாந்து, அரேபியா, பிலிப்பைன்ஸ், பொலினீஷியாத் தீவு முதலான தொலைதூர நாடுகளிலும் உள்ள மக்களும் கற்பொழுக்கம் பற்றி என்னென்ன எண்ணங்களைக் கொண்டிருந்தனர் - கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும், அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தது பற்றியும், காலப்போக்கில் அவை மாறுதலடைந்து வந்துள்ளன என்பது பற்றியும், ஈ.வெ.இரா. துல்லியமாக ஆய்ந்து விரிவாக விளக்கியுள்ளாரென்பது நாம் அறியத்தக்கது.

இதுபற்றியதொரு சிறு குறிப்பை இங்கே நாம் காணுதல் பயன்தரும்.

"நமது முன்னோர்கள் வாழ்ந்ததைவிடச் சிறப்பாக வாழக் கற்றுக் கொள்ளுவதே நாம் நமது முன்னோருக்குச் செய்யும் மரியாதை" என ஒரு பெரியார் கூறியிருக்கிறார். சமூக முன்னேற்றத்தைப் பற்றிய கருத்துகள் பல திறப்பட்டனவாயிருக்கின்றன. முன்னோர்கள் முன்னேற்றத்தைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. மேனாட்டாரைப் போலவே, கீழ்நாட்டாரும் முன்னேற்ற விஷயத்தில் அலட்சியமாகவே இருந்து வந்தனர். உண்பது, உடுப்பது போன்ற புறத் தேவைகளிலேயே அவர்கள் அதிகக் கவனம் செலுத்தி வந்தனர். சீர்திருத்த உணர்ச்சியும் முன்னேற்ற உணர்ச்சியும் மிகச் சமீப காலத்திலேயே தோன்றின.

**இப்பொழுதும் மிக்க ஆர்வமுடைய சீர்திருத்தவாதிகளும் கூட, சில குறிப்பிட்ட துறைகளிலே சீர்திருத்தம் செய்ய விரும்புகின்றனர். சர்வ வியாபகமான சீர்திருத்தங்களை விரும்புவோர் மிகச் சிலரே.**

**உலக முழுதும் பொதுவாக இருந்து வரும் சமூக இலட்சியம் என்னவெனில், நமது முன்னோர்களைப் போல் வாழ்க்கை நடத்துவதே.**

ஆனால், சமூக ஸ்தாபனங்கள் எல்லாம் குறைபாடுடையனவாகவே இருக்கின்றன. சீர்திருத்தம் தேவையில்லாத ஸ்தாபனங்களே உலகில் இல்லையென்று ஒப்புக்கொள்ளுவதே உயர்வான இலட்சியம். ஒழுக்கம் மக்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதை

# 9.7. ஆணுக்குப் பெண் சரிநிகர்

ஆணுக்குப் பெண் சரிநிகர் என்னும் நிலை நேற்றோ, இன்றோ மனிதகுலத்தில் வாழ்க்கையின் எந்த நிலையிலும் எந்தக் கட்டத்திலும் எங்குமே இல்லை. இந்த நிலை ஏற்பட்டே தீர வேண்டும் என்பதில் ஈ.வெ.இரா. உறுதியாக நின்றார். இந்த நிலை ஏற்படுவதற்குத் தடையாக உள்ளவற்றை அவர் அடையாளப்படுத்தினார். அப்படி அவர் அடையாளப்படுத்திய கூறுகள் மூன்று. அவை கட்டாயக் குடும்ப முறை, தனிச் சொத்து, வாரிசு உரிமை என்பவை ஆகும்.

இவற்றுள் கட்டாயக் குடும்ப முறை என்கிற திருமண முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அப்படி ஒழிக்கப்படுவதற்குத் தனிச் சொத்துரிமையும், வாரிசு உரிமையும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக விளங்கினார். இம்மூன்று கூறுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

இதனைப் பின்வரும் அவருடைய கருத்துகள் உணர்த்தும்:

ஆணுக்குப் பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்துப் போடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; வாழ்க்கைத் துணைவி ஆவாள். இருவருக்கும் உரிமை ஒன்றே. (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 230)

ஆண்-பெண் இருவருக்கும் உரிமை ஒன்றாக இருக்க வேண்டும் எனக் கருதிய அவர் ஒரு கட்டத்தில் தகப்பன் சொத்தில் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சரிபங்கு உண்டு என்பதை வலியுறுத்தினார். தனிச் சொத்துரிமை உள்ள சமுதாயத்தில் சரிநிகர் உரிமை வர இதுவே வழியாகும். ஆனால், தனிச் சொத்துடைமை ஒழிந்த சமுதாயத்தில் இது இயல்பாகவே தானாகவே வந்து சேரும். இதற்கு அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சோவியத்து இரஷ்யக் குடும்ப முறையை எடுத்துக்காட்டாகக் கொண்டார்.



அவர் கூறுகிறார்:

"இரஷ்யா முதலிய இடங்களிலே சொத்துகளைப் பற்றி வாரிசு அவசியமே இல்லை. அவர்களுக்கு அந்த மாதிரிக் கட்டுப்பாடு இல்லை.

ஏதோ இயற்கை உணர்ச்சிக்காக ஓய்வு நேரங்களிலே சாந்தி ஏற்படுவதற்காக ஒரு வாழ்க்கைத் துணைவி இருக்க வேண்டும். அவர்கள் சிநேகிதர்கள் மாதிரி என்றைக்கும் இருப்பார்களே தவிர, அங்குக் கலியாண முறையே கிடையாது. மற்றபடி நண்பர்களாக இருக்க வேண்டும். ஒருவர் இடத்திலே ஒருவர் காதல் உடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வளவுதான் இரஷ்யாவிலே ஆண், பெண்ணுடைய வாழ்க்கைத் தன்மை. காரணம் என்ன?

அங்கு ஏதாவது சொத்து இருந்தால்தானே வாரிசு ஏற்பட வேண்டும் என்பதற்கு? அந்தச் சர்க்கார் எல்லாருக்கும் பொது. அந்த நாட்டுச் செல்வம், தொழில்முறை, வளப்பம் எல்லாம் எல்லா மக்களுக்குமே விகிதாசாரம் என்று இருப்பதனாலே தனிப்பட்ட தங்களுடைய சொத்துக்கு வாரிசு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

குழந்தைகளைப் பெற்றால்கூட நம் நாட்டைப்போல அவ்வளவு அன்பு, ஆசை பார்க்காமல் இருப்பதால் கவலை என்று சொல்லுகிற தன்மை இரஷ்யாவிலே இல்லை. நானே நேரில் (1932) பார்த்துவிட்டு வந்தேன். குழந்தைகளைப் பெற வேண்டும்; பெற்றவுடனே அவர்கள் வைத்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் சர்க்காரிடம் ஒப்படைத்து விடலாம்; ஓய்வு உள்ள போது குழந்தையைப் பார்த்துவிட்டு வரலாம். மற்றபடி, படிப்புச் சொல்லிக் கொடுத்து, வேலை தேடிக் கொடுப்பது ஆகிய இந்த வேலைகள் எல்லாம் இரஷ்யாவில் தாய் தந்தையர்களுக்குக் கிடையாது...

சொத்து முதலியவைகள் இருப்பதனாலே, குழந்தை குட்டிகள் பெற்றுவிட்டால் எப்படி வளர்ப்பது என்கிற பொறுப்புகள் எல்லாம் இருப்பதினாலே, ஒரு முறை ஏற்படச் செய்து, அந்த முறை இப்படி இருக்க வேண்டும் என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த அமைப்புதான் இந்தத் திருமண முறை. அதற்குத்தான் கலியாணம் என்பது தவிர வேறு ஒன்றும் இல்லை. (பெரம்பூரில், 11-2-1951 இல் சொற்பொழிவு, 'விடுதலை' 17-2-1951; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக். 233-4)

அதன் மண்டையில் காயமுண்டாகும்படி இடியொன்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்படச் சுமார் 600, 700 பேர்கள் அக்குழந்தையையும், என்னையும் பார்த்து வண்ணமாயக் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடித்தனர். எனக்கும் அடக்கவொண்ணா அழுகை வந்துவிட்டது. ஆனால், இடிந்து கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்துத் தூக்கும் போதே மறுபடியும் அதற்குக் கலியாணம் செய்துவிடுவது என்கிற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு, அந்தப் பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப் பின் அதற்குக் கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச்செய்தி எனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் எட்டவே, அவர்கள் இதைத் தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போலக் கருதி, பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி, நாங்கள் பார்த்து வைத்திருந்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாரம் மைத்துனரைப் பிடித்துச் சரிசெய்து எவரும் அறியாவண்ணம் பெண்ணையும், மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று அங்குக் கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டி வந்தனர். ஆனால், நான் சிதம்பரத்திற்குப் போகாமல் ஊரிலேயே இருக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அவர்கள் போயுள்ள செய்தியைச் சுற்றத்தார் அறிந்தால், ஏதாவது மாப்பிள்ளையைத் தடை செய்துவிடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரிலிருந்தால் கலியாணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்களென சந்தேகமிருக்காது என்கிற எண்ணங்கொண்டேயாகும். இக்கலியாணத்தின் பலனாக, இரு மூன்று வருட காலம் பந்துக்களுக்குள் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டு, சாதிக் கட்டுப்பாடு இருந்து, பிறகு அனைத்தும் சரிப்பட்டுப் போயின.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஒத்துவாழ்ந்து ஓர் ஆண் மகவைப் பெற்றனர். ஆனால், துரதிருஷ்டவசமாகக் கொஞ்ச நாளையில் அந்த இரண்டாவது புருஷனும் இறந்துவிட்டான். இப்பொழுது தாயும் மகனும் சேமமாயிருக்கிறார்கள். இன்னமும் எனது வகுப்பில் 13 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைக் குழந்தைகள் சிலர் இருக்கின்றனர். பாவம், அக்குழந்தைகளை அவர்கள் பெற்றோர்கள் தீண்டாதார் போல் கருதி நடத்துவதைத் தினமும் பார்க்கப் பாவமாயிருக்கிறது.

எவ்வளவோ இடருக்குள் அகப்பட்டு அக்கலியாணத்தை முடித்து வைத்தோம். ஆனால், கடைசியில் அந்த இரண்டாவது கணவனும்



மரிக்கவே விதவாவிவாக விசயத்தில் தீவிரமாகத் தலையிட வேண்டுமென எனக்கிருந்த கருத்துக்குப் பெரிய முட்டுக்கட்டை போட்டது போலாயிற்று.

**விதவைகளின் விசயம் நினைவிற்கு வரும்போது - நேரில் காண நேரும்போது உலக இயற்கை, எளியாரை வலியார் அடக்கி ஆண்டு இம்சிப்பதல்லாமல் வேறல்ல என்றே முடிவு செய்வேன். நமது இந்து சமூகம் எந்தக் காலத்தில் எவருடைய ஆதிக்கத்தில் கட்டப்பட்டதோ, அன்று மதமில்லாமல், முறையில்லாமலிருந்து, இயற்கையாகவே ஏதாவது கட்டுப்பாடுகள் ஏற்பட்டு, அவற்றை வலியவர்கள் தங்கள் தங்கள் சவுகரியத்திற்குத் தக்கபடி திருத்திக் கொண்டார்களோ என நினைக்கும்படி இருந்தாலும் - பொதுவாய் விதவைத் தன்மை நிலைத்திருக்கும் காரணத்தினாலேயே இந்து மதமும் இந்துச் சமூகமும் ஒரு காலத்தில் அடியோடு அழிந்துபோனாலும் போகுமென்பதே எனது முடிவான கருத்து."**

("குடி அரசு", 22.8.1926;
**பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்**, பக். 135,-6)

விதவைத் தன்மை என்பது ஒழுக்கச் சிதைவைத் திணிப்பதாகும் என்றும், கள்ளத்தனமாகப் பிள்ளை பெறுவதில் கொண்டுபோய்த் தள்ளி விடுகிறதென்றும், கட்டுக்காவலை மீறித் தீரவேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாக்குகிறதென்றும் எடுத்துக்காட்டிய ஈ.வெ.இரா., 'இவை எல்லாம் கடவுள் செயல்கள் என்று கடவுள் நம்பிக்கைக்காரர்கள் நினைக்கிறார்களா?' என்று ஒரு வினாவை எழுப்பினார்.

அத்துடன் விதவைத் திருமணம் கூடாது என்பது பெரும்பாலும் மேல்சாதிக்காரர்களிடமே நிலவி இருந்தது. கீழ்சாதிக்காரர்களிடமும், உழைப்பாளிச் சாதிகளிடமும் அது இல்லை என்பதையும் சுட்டிக் காட்டினார். பின்வரும் செய்திகள் அதை உணர்த்தும்.

"இந்நாட்டில் ஒழுக்கம் சீர்பட வேண்டுமானால்- விபச்சாரம் என்னும் காரியத்திலுள்ள கெடுதிகள் நீங்க வேண்டுமானால் - விதவைத் தன்மையையும், ஆண்களுக்கு விபச்சாரத் தோஷமில்லை என்கின்ற நடப்பையும் ஒழித்தாக வேண்டும். இவ்விரண்டு காரியங்களே பெரிதும் மனிதத் தன்மைக்கும், இயற்கை இன்ப நுகர்ச்சிக்கும் இடையூறாய் இருந்து வருகின்றன. பெண்களைப் பெற்றோர்களும் ஒரு விஷயத்தில் கவனிக்க வேண்டும். பெண்களுக்கு 16 வயதுவரை நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டும்; தனக்கு வேண்டியவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பழக்க வேண்டும்.